www.tamilarangam.net




# கம்பன்

இலக்கிய இலக்கணத் திங்களிதழ்

திருவள்ளுவர் ஆண்டு – 2034 – விடை – 1 (15 – 06 – 2003) இதழ் – 30

ஆசிரியர்

கவிஞர் கி.பாரதிதாசன்



## தினத்தந்தி நிறுவுநர் ஆதித்தனார்

தோற்றம் 27 – 09 – 1905 மறைவு 24 – 05 – 1981

தன்னுடலை மண்ணுக்கும் தண்டமிழர் போற்றிடவே
இன்னுயிரை ஈடில் தமிழுக்கும் – என்றுரைத்து
அன்னை மொழிகாத்த ஆதித்தனார் சீரோ
விண்ணைக் கடக்கும் விரிந்து.

– ஆசிரியர்

கம்பன் கழகம் – பிரான்சு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# கம்பன்

இலக்கண இலக்கியத் திங்களிதழ்

ஆண்டு – 3 திங்கள் – 6




''யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின்
போர் ஒடுங்கும், புகழ் ஒடுங்காது''


ஆசிரியர்
**கவிஞர் கி. பாரதிதாசன்**

புரவலர்
நந்தா தாமோதரன்

வடிவமைப்பு
'தமிழ்நெஞ்சம்' அமின்

கணிப்பொறி
பொ.மணிவண்ணன்
சுதாகர்

வெளியீடு
கம்பன் கழகம்
பிரஞ்சு தமிழ் ஆய்வுக் கழகம்
பிரான்சு



அஞ்சல் தொடர்புகளுக்கு
Corespondence

Poète K. BHARATHIDASAN
6 RUE PAUL LANGEVIN
95140 - GARGES LES GONESSE
FRANCE

Tél: 0033 (0)1 39 86 86 53

E-mall:
bharathidasan @ wanadoo. fr



வருகின்ற படைப்புகளைச்
சுருக்கவும், திருத்தவும்
ஆசிரியருக்கு உரிமையுண்டு.

பெயர் இல்லாப் படைப்புகள்
ஆசிரியரால் எழுதப்படுபவை


# தமிழில் வழிபாடு

## அருட்டிரு குன்றக்குடி அடிகளார்

1. எந்த இனத்திற்கும் அவற்றின் தாய்மொழி வழியே சமயம் தோன்றி வளர்ந்து வாழ்வளிக்குமே தவிர பிறமொழி வழியல்ல என்பது வரலாற்று நூல் முடிபு.

2. வழிபாட்டிற்குச் சிந்தனையே அடிப்படை. பெரும் பான்மையோருக்குத் தாய்மொழி வழியே சிந்தனை தோன்றிச் சிறக்குமானால் வழிபாட்டிற்குத் தாய்மொழியின் தேவையைச் சொல்லவும் வேண்டுமோ?

3. ஒரு கால் அறிஞரானோர் சிலருக்குப் பிற மொழியில் சிந்திக்க முடியுமானாலும், அக்கருத்து உணர்வைத் தொடுவதில்லை, வழிபாட்டுக்கு உணர்வே உயிர்நாடி.

4. வழிபாட்டிற்குக் காதல், கனிவு, கசிவு இவ்வுணர்வுகளின் வழிப்பட்ட நெகிழ்ச்சி தேவை. இவ்வுணர்வுகளை, மெய்ப்பாடுகளை ஒருவர் தாய்மொழியிலேயே பெறமுடியும் என்பதால் வழிபாடு அவசியம்.

5. வழிபாடு என்பது உயிரைத் தூய அருளார்ந்த அனுபவத்திற்கு அழைத்துச் செல்கின்ற சாதனம். எந்த உயிர் அனுபவத்தை விரும்புகிறதோ அந்த உயிர் மனம் கரைந்து கசிந்து வழிபாடு செய்ய வேண்டும். தூய்மையாக்கப்பட வேண்டிய பாத்திரத்தைத் தேய்த்தாலே பாத்திரம் தூய்மையாகும். உழுது பண்படுத்த வேண்டிய நிலத்தை உழுதாலேயே நிலம் பண்படும். அதுபோலவே, அனுபவ நிலையினின்றும் விலகியே. அருளார்ந்த அனுபவத்தைப் பெற வேண்டிய உயிர்களின் உணர்வை, வழிபாடு தொட்டு அவ்வுயிரின் புலன்களை ஞான ஏர்கொண்டு உழுதாலேயே அவ்வுயிர் திருவருளைப் பெற முடியும். அதற்குத் தாய்மொழியே சாதனமெனக் கூறவும் வேண்டுமோ?

6. மந்திரங்களுக்கும், மறைகளுக்கும் மொழி வரையறை கிடையாது. நிறைமொழி மாந்தர்கள் (ஞானிகள்) அருளிச் செய்தனவெல்லாம் பொருளும் பயனும் நோக்கி மறைகளும் மந்திரங்களுமாகும்.

7. பழங்காலந் தொட்டு மறைகளும், மந்திரங்களும் பழக்கத்தில் இருந்து வருகின்றன.

8. தமிழில் மந்திரங்கள் இருந்தன, இருக்கின்றன என்பதைத் தொல்காப்பியம், திருக்குறள், காஞ்சிப்புராணம், திருமுறை கண்ட புராணம், திருமந்திரம், முதலிய நூல்களின் வழியறிந்து உணர முடிகிறது. தமிழகத் திருக்கோயில்கள் பலவற்றிற்குத் திருவருட் பொலிவும் (சாநித்தியம்) பெருமையும், சைவ நாயன்மார்களின் திருப்பாடல்களாலும், ஆழ்வார்களின் பனுவல்களாலும் என்பதை மறுப்பதில்லை.

9. இறைவன் நம்முடைய தாய்மொழியாம் தமிழ் மீது காதலுடையவன்.

அ. தமிழ்ப்புலவனாக அமர்ந்து தமிழை ஆராய்ந்து கவிதையையும் செய்திருக்கிறான்.

ஆ. அவன் மட்டுமல்ல அன்னை பராசக்தியும் செந்தமிழ் முருகனும் தமிழ் ஆராய்ந்திருக்கின்றனர்.

இ. சைவ நாயன்மார்கள் பாடிய பாடல்களைக் கேட்க வேட்கை மீதூர்ந்து காசும் பிறவும் கொடுத்துக் கொண்டிருக்கிறான்.

ஈ. சேக்கிழாருக்குப் பெரிய புராணம் செய்ய அடி எடுத்துக் கொடுத்த போது ''உலகெலாம்'' என்ற தூய தமிழ்ச் சொல்லை எடுத்துக் கொடுத்தான்.

உ. மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தைத் தாமே தம் கைப்பட எழுதியிருக்கிறான்.

ஊ. உமாபதி சிவாச்சாரியருக்குக் கொடுத்த சீட்டும் தமிழிலேயாம்.

எ. அன்னை பராசக்தி கொடுத்த சிவஞானப்பாலை உண்ட, வேதநெறி தழைத்தோங்கப் பிறந்த திருஞானசம்பந்தர் ''தோடுடைய செவியன்'' என்று தமிழிலேயே பாடியது. அப்படியானல் அன்னை பராசக்தி கொடுத்த சிவஞானம் தமிழ் வழிப்பட்டது தானே!

மேற்கண்ட சான்றுகளால் இறைவன் தமிழை விரும்பினன் என்ற கருத்து உறுதியளிக்கிறது.

10. திருமுறைகள் இறைவனே உரைகளாக உகந்து, ஏற்றுக் கொண்டவைகளேயாகும். அவைகளால் வழிபாடு செய்வது ஆண்டவனுக்கு மிகவும் உகந்தது.

11. திருமுறைகள் செந்தமிழ் மந்திரங்கள். அவைகளில் ஒவ்வொரு எழுத்தும் சொல்லும் கூட மந்திரங்கள். அவைகள் செயற்கரிய செய்கைகளைச் செய்தன. அத்தகு செயற்கரிய செயல்களைச் செய்த திருமுறைகளால் வழிபாடு செய்தால் எண்ணிய பயனை எய்த முடியும்.

மிக அண்மைக்காலம் வரையில் எல்லோரும் மூர்த்தியைத் தீண்டி, திருமுழுக்கு செய்து, மலர்தூவி வழிபாடு செய்கின்ற முறை இருந்து இருக்கிறது என்பதைத் திருமுறைகளின் மூலமும் புராணங்களின் மூலமும் அறிந்த கொள்ள முடிகிறது.

## கவிஞர் பாரிசு பார்த்தசாரதி எழுதிய கவிதை நூலுக்குப் பரிசு

கம்பன் இதழ் எழுத்தாளர், பிரான்சு தமிழ்ச் சங்கப் பொதுச்செயலாளர், கவிஞர் பாரிசு பார்த்தசாரதி எழுதிய எல்லா மலரிலும் உன் வாசம் என்ற கவிதை நூலுக்குக், கவிதை உறவு இலக்கியத் திங்கள் இதழ் சிறந்த கவிதை நூலுக்கான மூன்றாம் பரிசை உருபாய் இரண்டாயிரத்தை அளித்துச் சிறப்பித்துள்ளது. பரிசு பெற்ற பாவலரைக் கம்பன் மகிழ்வுடன் பாராட்டுகிறது.

– ஆசிரியர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடுத்தோர் பிறவி

## கவிஞர் கி. பாரதிதாசன்

எடுத்தோர் செயலை முடிக்கின்ற
ஏற்றம், ஏழை பசிதீரக்
கொடுத்தோர் பெற்ற பேருள்ளம்,
கொஞ்சும் தமிழாம் பெரும்புலமை,
படுத்தோர் அணையில் உலகாளும்
பரமா! பாவம் முற்றுமிலா
அடுத்தோர் பிறவி வாய்க்குமெனில்
அடியேன் இவைகள் பெறவேண்டும்!

முன்னோர் படைத்த செந்தமிழை
முழுதும் கற்றுப் புகழுறவும்
அன்போ(டு) அழகும் அறநெறியும்
அமைந்த மங்கை துணைதரவும்
என்போ(டு) உறையும் எழில்கண்ணா!
எளியேன் கேட்கும் வகையினிலே
பின்னோர் பிறவி வாய்க்குமெனில்
பிறக்கச் செய்வாய் என்னுயிரை!

செய்யும் தொழிலால் மாந்தரினம்
சீரும் பேரும் பெற்றனரே!
பொய்யாய்ச் சாதி புனைகின்ற
புல்லர் இல்லாத் தரைமீது
மெய்யாம் நெறியை யான்சூடி
மேன்மை பெறவே, இங்கடுத்தோர்
உய்யும் பிறவி வாய்க்குமெனில்
ஒளிரும் வண்ணம் எனைச்செய்க!

உண்ணா, உறங்கா உயர்நிலையில்
ஒளிரும் சித்தர் ஞானமெதை
எண்ணா திருந்த என்னுயிரும்
இனியோர் பிறவி எடுக்குமெனில்
நண்ணா திருந்த பேரொளியை
நன்றே சூடி நலமெய்தக்
கண்ணா என்னைப் படைத்திடுக!
கருணைக் கடலே! கனியமுதே!

செல்வச் செழிப்பு பெற்றாலும்
செறுக்கே இல்லாச் சீருளமும்
கொல்லும் துயரை உற்றாலும்
கொள்கை மாறா நன்னிலையும்
வெல்லும் அறிவு நிறைந்தாலும்
மேலோர் போன்று பயன்தரவும்
உள்ளும் உணர்வில் எந்நொடியும்
ஒளிரும் கண்ணா எனைச்செய்க!

வல்ல புலவன் பாரதியாய்,
வாழ்வைக் காத்த பெரியாராய்,
நல்ல அறிஞன் அண்ணாவாய்,
நன்றே ஆய்ந்த நேயராய்,என்
உள்ளம் தன்னில் குடிகொண்டே
ஒளிரும் கண்ணா! மீண்டுமொரு
வெல்லும் பிறவி வாய்க்குமெனில்
வீரர் இவர்போல் எனைச்செய்க!

வடலூர் வள்ளல் பொதுநிலையை
மாண்பாய் எங்கும் பரப்பிடவும்
உடலும் உயிரும் உயர்தமிழின்
உயர்வை எண்ணி உழைத்திடவும்
படரும் மடமை முட்செடியைப்
பாரில் முற்றும் ஒழித்திடவும்
தொடரும் பிறவி வாய்க்குமெனில்
தூயா என்னைப் படைப்பாயே!

பெண்மேல் ஆசை வெறிகொண்டால்
பெறுவோம் அழிவை! அடுத்தவர்தம்
மண்மேல் ஆசை வைத்திட்டால்
மாய்போம் வாழ்வை! மிளிர்கின்ற
பொன்மேல், பொருள்மேல் பேராசை
பொன்ற ஏற்போம் பாழ்இழிவை!
என்மேல் இவைகள் மேவாமல்
இறைவா மீண்டும் எனைச்செய்க!

பொழில்சூழ் நகரில் பாய்தோடும்
புனித ஆற்றின் கரையினிலே
செழித்த சோலை நடுவினிலே
சின்ன குடிசை வீட்டினிலே
மொழியைக் காக்கும் முனிவனென
முன்னைத் தமிழின் சீர்பாடப்
பொழியும் புகழில் வரும்பிறவி
பூக்கும் வண்ணம் எனைச்செய்க!

இந்த வாழ்வு முடிவெய்தி
எடுக்கும் அடுத்த பிறவியிலோ
முந்தும் வினையால் துயர்க்கடலில்
முழுகித் துடிக்கும் நிலைவரினும்
அந்தம் ஆதி அறிந்துலகை
ஆக்கி அழிக்கும் திருக்கண்ணா
சிந்தை யுன்னை மறவாமல்
சிறக்கும் வண்ணம் எனைச்செய்க!

## தகுதியுள்ள யாரும் அர்ச்சகராகலாம்

## உச்சநீதிமன்ற தீர்ப்பு தமிழில் வழிபாடு பற்றிய இந்தியச் செய்தி

ஆலயங்களில் பூசை செய்வது பிராம்மணர்களின் ஏக போக உரிமையில்லை. சமயச் சடங்குகளில் முறையான பயிற்சி பெற்றவராக இருந்தால் பிராமணர் அல்லாதவர்களும் கோயில் பூசாரிகளாக நியமிக்கப்படலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆலய பூசை விதிமுறைகள் நன்கு தெரிந்தவர்கள், அதில் நன்கு பயிற்சி பெற்றவர்கள், ஒரு குறிப்பிட்ட தெய்வத்தின் வழிபாட்டு முறைகள் தெரிந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதைக் கருத்தில் கொள்ளாமல் அவரைப் பூசாரியாக அமர்த்தலாம் என்றும் உச்ச நீதி மன்றம் கூறியுள்ளது. கேரள மாநிலம், எர்ணா குளம் அருகே உள்ள ஆலங்காடு சிவன் கோயிலில் பிராமணர் அல்லாத ஒருவர் பூசாரியாக நியமிக்கப்பட்டார். இதை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதிகள் இராசேந்திர பாபு, துரைசாமிராசு ஆகியோர் அடங்கிய மன்றம் மேற் கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது. ஆகம விதிமுறைகள், பூசைக்குரிய வழிபாட்டு மந்திரங்கள் நன்கு தெரிந்தவர்கள் தாம் பூசாரிகளாக வரவேண்டும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. அத்தகைய நபர்கள்தாம் கோயிலுக்குள் சென்று தெய்வங்களின் சிலைகளைத் தொட்டு வழிபாடு நடத்தும் தகுதி பெற்றவர்கள். இதில் நாம் பார்க்க வேண்டியது என்ன என்றால் ஒருவர் ஆகம விதிமுறைகள், ஆலய வழிபாட்டு முறைகளை நன்கு கற்றுத் தேர்ந்திருக்கிறாரா என்பதைத் தானே தவிர அவர் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதை அல்ல. சில கோயில்களில் வழக்கமான நடைமுறை காரணமாகவோ அல்லது மரபு வழியிலோ பிராமணர்களே வழிபாடு நடத்திப் பூசாரிகளாகச் செயல்பட்டு வரலாம். ஆனால் அதற்காகப் பூசைகள் நடத்தப் பிராமணர் அல்லாதவர்களுக்குத் தடை விதிக்கப் பட்டுள்ளதாக அர்த்தமல்ல. தகுதியுள்ள எந்த நபரும் பூசாரியாகலாம்.

இந்த வழக்கில் பிராமணரோ அல்லது மலையாள பிராமணரோ பூசாரியாக நியமிக்கப் பட வேண்டும் என்று வலியுறுத்துவதில் எந்த நியாயமும் இல்லை. அரசியலமைப்புச் சட்டம் 25 ஆம் பிரிவின் படி எல்லோருக்கும் எல்லா உரிமையும், சுதந்திரமும் உள்ளன. எனவே தகுதி வாய்ந்த பிராமணர் அல்லாதவர்கள் பூசாரிகளாக நியமிக்கப்பட்டால் அது குறித்து எவரும் கேள்வி எழுப்ப முடியாது என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

– நன்றி : தினமணி

பல்சுவைத் தாளிதழ்
தமிழ்நெஞ்சம்
கதை, கவிதை, கட்டுரைகளை எதிர்பார்க்கிறது. எழுதுங்கள்.

TamilNenjam
59, rue des Entrechats, 95800 Cergy - France



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தனித்தமிழ் மாட்சி

## மறைமலையடிகள்

தொடர்ச்சி – 6

### பகுத்துணர்வும் மாந்தரும்

மாதர்களுடைய நன்மையையும் முன் ஏற்றத்தையும் நாடி அவர்களுக்கு முதன்மையாக வேண்டுஞ் சில சிறந்த பொருள்களை இங்கே சிறிது விளக்கிச் சொல்வாம். நமது தமிழ் நாட்டைத் தவிர, மற்ற நாடுகளிலிருக்கும் பெண்மணிகள் கல்வியிலுங் கடவுள் வணக்கத்திலும் நாகரிக ஒழுக்கத்திலும் நாளுக்கு நாட் பிறை போல் வளர்ந்து மிகவும் இனிதாக உயிர் வாழ்கின்றார்கள். நமது தமிழ் நாட்டு மாதர்களோ சிறந்த கல்வி உடையவர்களும் அல்லர் உண்மையான கடவுளை வணங்கத் தெரிந்தவர்களும் அல்லர், வேறு எவ்வகையான நாகரிகத்திலும் உயர்ந்தவர்களும் அல்லர். உண்ண உணவும், உடுக்கத் துணியும், இருக்க இடமுங் கிடைத்தாற் போதும் என்றும், இவைகளைத் தேடிக் கொள்வதிலும், தேடிய இவற்றை உண்டு உடுத்து உறைவிடமாக்கி உறங்கிக் கழிவதிலுந் தம் வாழ்நாளைக் கடத்தி வருகின்றர்கள், உயர்ந்த அறிவாவது உயர்ந்த நோக்கமாவது நம் பெண் மக்களுக்குச் சிறிதும் இல்லை அல்லது உயர்ந்த அறிவையும் உயர்ந்த நோக்கத்தையும் பெறல் வேண்டு மென்னும் விருப்பமாவது இவர்களுக்கு இருக்கின்றதோ வென்றால், அதுதானும் இல்லை. உண்டு உடுத்து உறங்கி வாழ்நாட் கழிப்பதைவிட மக்களால் அடையத்தக்க வேறு சிறந்த பொருள் இல்லையென்றே நினைக்கின்றார்கள்.

அப்படி நினைத்தால் மக்களுக்கும் மற்ற உயிர்களுக்கும் வேற்றுமை யாது? மக்களினுந் தாழ்ந்த ஆடு மாடு குதிரை முதல் ஈ எறும்பு புழு ஈறான எல்லாச் சிற்றுயிர்களுங் கூடப், பசியெடுத்த போது தமக்கு எளிதிலே கிடைக்கும் புல் இலை தழை கிழங்கு கனி தேன் முதலான இரைகளைத் தேடி உட்கொண்டும், மலையருவி ஆறு ஏரி குளங் கூவல் முதலியவற்றின் நீரைப் பருகியும், பசி தீர்ந்த பின் மரங்களின் அடியிலோ செடிகளின் நடுவிலோ மலைப் பிளவுகளின் இடையிலோ கிடந்துங் கவலையின்றி உறங்கிக் காலங் கழிக்கின்றன, மக்களுக்காவது உடுக்க ஆடை வேண்டும், இச் சிற்றுயிர்களுக்கோ ஆடையும் வேண்டுவதில்லை மழையில் நனையாமலும் பனியிற் குளிராமலும் வெயிலில் வெதும்பாமலும் அவ்வுயிர்களைப் பாதுகாக்கத் தடிப்பான தோலோடு அடர்த்தியான மயிரையுங் கம்பளிப் போர்வை போல் அவைகளுக்கு இறைவன் கொடுத்திருக்கின்றான். வெப்பம் மிகுந்த நமது தமிழ் நாட்டிலுள்ள ஆடு மாடுகளுக்குக் குளிரின் துன்பம் மிகுதியாய் இல்லாமையால், அவைகளின் உடம்பின் மேல் அடர்ந்து நீண்ட மயிர்கள் இல்லை. ஆனால், வடக்கே இமயமலையிலும், அம் மலைச்சாரலில் உள்ள இடங்களிலும் போய்ப் பார்த்தால், அங்குள்ள ஆடு மாடுகளுக்கு அடர்ந்து நீண்ட மயிர்களிருத்தலைக் காணலாம். ஏனென்றால், அம் மலைநாடுகளில் தாங்க முடியாத பனியிலுங் குளிரிலும் மாண்டு போகாமல் அவற்றைப் பாதுகாப்பதற்காகவே எல்லா இரக்கமும் உள்ள கடவுள் அவைகளின் உடம்பின் மேல் நீண்டு அடர்ந்த மயிரை வளரச் செய்திருக்கின்றான். ஆகவே, உணவின் பொருட்டும் மக்களாகிய நாம் ஓயாமல் அடையுங் கவலையுந் துன்பமும் நம்மில் தாழ்ந்த சிற்றுயிர்களுக்குச் சிறிதும் இல்லை. வேண்டும் போது இரைதேடித் தின்றும், உறக்கம் வந்த போது உறங்கியும், ஆணும் பெண்ணுமாய்க் கூடித் தம் இனங்களைப் பெருக்கியும் அவைகள் கவலையின்றிக் காலங் கழிக்கின்றன.

இப்படிப்பட்ட சிற்றுயிர்களின் வாழ்க்கையையும், உணவுக்கும் உடுப்புக்கும் இருப்பிடத்திற்கும் அல்லும் பகலுமாய்ப் பாடுபட்டு, மனைவியாற் கணவனுங், கணவனால் மனைவியும், பெற்றோராற் பிள்ளைகளும், பிள்ளைகளாற் பெற்றோர்களும், ஒரு சுற்றத்தாரால் அவர்களின் குடும்பத்தாரும், ஓர் ஊராரால் அவர் தம் அரசரும், ஓர் அரசரால் அவர்தம் ஊராரும் ஆக எல்லாருமாய்ப் பலவகைத் துன்பங்களுக்கு ஆளாகி நோயிலுங் கவலையிலும் இடையறாது உழன்று வருந்தி வரும் மக்களாகிய நமது வாழ்க்கையையும் வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால் நமது துன்ப வாழ்க்கையை விடச் சிற்றுயிர்களின் இன்ப வாழ்க்கை எத்தனையோ மடங்கு சிறந்ததாய்க் காணப் படுகின்ற தன்றோ? தம்மைப் படைத்த உண்மையான கடவுளை நினையாமல் நம் போன்ற மக்களைத் தெய்வமாக வணங்கியுந் தம்மையே தாம் பெரியராக நினைந்தும் வாழ்நாள் முதிரா முன்னரே கவலையாலும் நோயாலுங் கூற்றுவன் வாய்ப்பட்டு மடியும் நம் மக்கட் பிறவியை விட, இறைவனது பாதுகாப்பில் அடங்கிக் கவலையின்றி உயிர் வாழும் விலங்கினங்களின் வாழ்க்கை சிறந்ததா யிருக்கின்றதென நினைப்போமாயின், அஃது எவ்வளவு பேதைமையாகக் காணப் படுகின்றது!

அப்படியானால், எல்லாப் பிறவிகளையும் விட மக்கட் பிறவியே சிறந்த தென்று அறிவுடையோர்களும் அவர் செய்து வைத்த நூல்களுஞ் சொல்வது ஏனென்றால், எந்த வகையில் மக்கட் பிறவியானது மற்றச் சிற்றுயிர்களின் பிறவியை விட அங்ஙனஞ் சிறந்ததா யிருக்கின்றது என்பதை நாம் நன்கு ஆராய்ந்து பார்த்துத் தெளிதல் வேண்டும். மக்களாகிய நாம் பகுத்தறிவு உடையவர்களாயிருக்க, மற்றச் சிற்றுயிர்களோ அத்தகைய பகுத்துணர்வு உடையனவாய்க் காணப்படவில்லை. அதனாலே தான் நமது பிறவி யானது மற்ற விலங்கின் பிறப்பை விடச் சிறந்த தாகுமென்று அறிகின்றோம். விலங்குகளுக்கு இது நல்லது, இது தீயது என்று பகுத்துணர்தல் இயலாது, அவை வழக்கமாய்த் தின்னுந் தீனியையே உட்கொள்ளும். பெரும் புதர்களிலும் மலைக்குகைகளிலும் மரநிழல்களிலுங் கிடந்தபடியே நாளைக் கழிக்கும் இவற்றிற்கு மேல் அவைகள் ஒன்றையும் அறியமாட்டா, மேன்மேல் இன்பத்தைப் பெருக்கும் வழி வகைகளும் அவை தெரிந்து கொள்ளல் முடியாது, பிற உயிர்களுக்கு நன்மையாவது இது, தீமையாவது என்றும் அவை அறிவதில்லை. இந்த உலகத்தில் நாம் ஏன் படைக்கப்பட்டு இருக்கின்றோம்? இந்த உடம்பு ஏன் நிலையாயிருப்பதில்லை? சிறிது காலத்தில் இந்த உடம்பு அழிந்து போக உயிர் எங்கே போகின்றது? சிறிது காலத்தில் இந்த உடம்பின் உறவால் வந்த பெற்றோரும் மனைவி மக்களும் உடன் பிறந்தாரும் நேசரும் சுற்றத்தாரும் சூழ்ந்து கொண்டிருக்கவும் இந்த உயிர் திடீரென்று இவர்கள் எல்லாரையும் விட்டு எங்கே போகின்றது? அப்படிப் போகும் உயிரை இவர்கள் ஒருவருந் தடுக்க மாட்டாதவர்களாய் அலறி வீழ்ந்து அழுவதேன் ? எவராலுந் தடுக்க முடியாத இந்தப் பிறப்பு இறப்புகளை நீக்கும் வழியாது? என்று இங்ஙன மெல்லாம் ஆராய்ந்து பார்க்கக் கூடிய உணர்ச்சியும், அவ்வுணர்ச்சியால் அடையத் தக்க பெரும் பயனும் விலங்குகளுக்குச் சிறிதும் இல்லை.

மக்களாகிய நாமோ இவைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து, அவ் வாராய்ச்சியால் வரும் பயனை அடையத் தக்க உயர்ந்த நிலையில் இருக்கின்றோம். கிடைத்தற்கு அரிய இவ் வுயர்ந்த நிலையில் இருந்தும், இவ் வுண்மைகளை ஆராய்ந்து பாராமல், விலங்குகளைப் போல உண்பதிலும் உறங்குவதிலுங் காலங் கழித்து, வகை வகையான உடைகளை உடுப்பதும், பளபளப்பான நகைகளைப் பூண்பதும், மினுமினுப்பான வண்டிகளிற் செல்வதும், நாளுக்கு நாள் வளரும் புதுமைகளைக் காண்பதும், மேலுக்கு மேல் எழும் பாட்டுகளைக் கேட்பதும், ஒன்றுக்கு மேல் ஒன்று உயர்ந்த மணப் பண்டங்களை மோப்பதுங், கற்கக் கற்க இனிக்குங் கதைகளைக் கற்பதும் ஆகிய இவைகளே மக்கட் பிறவியினால் அடையத் தக்க பெரும் பயன்கள் என்று நம்மவர் நினைப்பார்களாயின், ஐயோ! அவர்கள் விலங்கினங்களினுங் கடைப் பட்டவர்கள் ஆவார்கள் அல்லரோ?

(தொடரும்)

---

பொருள் உணர்க!

**கலைக்கழகம்**
கலையை வளர்க்கும் கழகம் (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை)

**கலைகழகம்**
கலைந்து போகும் கழகம் (வினைத் தொகை)

**ஓடாக் குதிரை**
ஓடாத குதிரை (ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரச்சம்)

**ஓடா குதிரை**
குதிரை ஓடமாட்டா (வினைமுற்று)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இராமனும் பலராமனும்

இறைவனான திருமாலை என்றும் பிரியாதவன் பாம்புகளின் தலைவனான ஆதிசேடமூர்த்தி, "இறைவன் நடந்தால் ஆதிசேடன் குடையாகி விடுகிறான். அமர்ந்தால் சிம்மாசனமாகி ஐந்து தலைகளையும் விரித்துக் குடையாகவும் வருகிறான். நின்றால் பாதுகையாக மாறி இறைவன் திருவடியைத் தாங்குகிறான். கடலில் இறைவன் படுக்கும் போது பாம்பாக மாறி, பாற்கடலில் தெப்பம் போல் மிதந்து இறைவனது படுக்கையாகிறான். பாம்புகளின் தலையில் நாகரத்தினம் உள்ளது என்பர். ஆதிசேடனின் ஆயிரம் தலைகளில் உள்ள ரத்தினங்கள் விளக்குகளைப் போல் விளங்கின– என்று ஆதிசேடனின் பெருமையைப் பாடுவார் பொய்கை ஆழ்வார்.

சென்றால் குடையாம், இருந்தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம், நீள் கடலுள் என்றும் புணையாம், மணி விளக்காம், பூம்பட்டாம், புல்கும் அணையாம் திருமாற்கு அரவு. –முதல் திருவந்தாதி 52–ம் பாடல்.

இறைவனைப் பிரியாத ஆதிசேடன் இலட்சுமணனாகப் பிறந்தான். இறைவனான இராமபிரானும் இலட்சுமணனும் பிரிந்ததே இல்லை. பாம்புகளுக்குக் கண்களே காதாகும். ஆதலால் கட்செவி எனப் பாம்புகளை அழைப்பர். பாம்புகளின் கண்கள் இமைக்காதவை. அதனால் தான் இலட்சுமணன் பதினான்கு ஆண்டுகள் கண்கள் இமைக்காது, உறக்கம் என்பதே இல்லாமலிருந்தான். இலட்சுமணனை இராமபிரான் இதனாலேயே, "துஞ்சலில் நயனத்து ஐயா!" தூங்காத கண்களை யுடையவனே! என அழைத்தார். காட்டில் சீதாபிராட்டி மரியாதைக்காக, தனித்து உள்ளே சென்று அமருவதற்குத் தனி இடம் அமைத்தான். வேறிடம் அமைத்தான் மிதிலை நாடிக்கும் (மிதிலையை நாடி வந்த மகாலட்சுமி) எனக் குறித்தார் கம்பர். இது கண்ட இராமபிரான் "இலட்சுமணா! எப்போது இக்கலையைக் கற்றாய்? எனக் கேட்டுக் கண்ணீர் விட்டார் என்பார் கம்பர்.

இராமபிரானிடமிருந்து சீதாபிராட்டியைப் பிரித்து விட்டால், தனக்கு இராமபிரான் கணவனாகக் கிடைப்பார் என்ற தீய நோக்குடன் சீதாபிராட்டியைத் தூக்கிச் செல்ல வந்த சூர்ப்பணகையின் மூக்கு, காதுகளை அறுத்தான். ஒரு பெண்ணைக் கொல்ல வேண்டாமே என்ற எண்ணத்தில் தாடகையைக் கொல்லத் தயங்கினார் இராமபிரான். கொடியவளைக் கொல்லுவதில் குற்றமில்லை என விசுவாசமித்திரர் கூற, இராமபிரான் தாடகையைக் கொன்றார்.

இராமபிரானின் வழியே தானும் நடக்கும் தன்மையை உடைய இலட்சுமணனும் அயோமுகி என்ற அரக்கி தன்னை நோக்கி வந்த போது அவளைக் கொல்லாமல் மூக்கு, காதுகளை மட்டும் அறுத்தான். காட்டில் தனக்காகத் தண்ணீர் தேடச் சென்ற இலட்சுமணன் வரத் தாமதமானது கண்டு வருந்திய இராமபிரான் இலட்சுமணனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்து விட்டது என எண்ணி, உடைவாளை உருவி, தன்னையே அழித்துக் கொள்ள எண்ணி, "தருமம் என ஒன்று இருக்குமென்றால், இந்த இலட்சுமணன் அடுத்த பிறவியில் என் அண்ணனாகப் பிறக்க வேணும்".

"அறப்பால் உளதேல் அவன் முன்னவனாய்ப் பிறப்பானுரின் வந்து பிறக்க"எனக் கூறியபோது, அயோமுகியின் மூக்கு, காதுகளை அறுத்த லட்சுமணன் ஓடி வந்து, இராமபிரான் தன்னை அழித்துக் கொள்ளாத வண்ணம் தடுத்து விட்டான்.

போர்க்களத்தில் இந்திரசித்தின் பிரம்மாச்திரத்தினாலும், இராவணனின் வேலாயுதத்தாலும் இலட்சுமணன் உயிர் நீங்கினான். இரு முறைகளிலும் அனுமான் மருத்துவ மலையைக் கொண்டு வந்து அவனை மீண்டும் உயிர் பெறச் செய்தான். இராமபிரான் விரும்பியபடியே, இராமாபிரான் கண்ணனாக அவதரித்த போது, இலட்சுமணன் பலராமராக அவதரித்தார். இலட்சுமணனுடைய மறைவு கூட, இராமபிரான் மீதிருந்த அன்பின் காரணமாகவே நிகழ்ந்தது என்று ஒரு வரலாறு உண்டு.

இராமபிரான் முடிசூடி மன்னவனாகிப் பல ஆண்டுகளுக்குப் பின் அவர் வைகுந்தம் திரும்புவற்கு நினைவுறுத்த யமன் ஒரு முனிவன் வேடத்தில் தோன்றினான். "நாம் இருவரும் தனிமையில் பேச வேண்டும். வாசலில் தக்க காவலாரை நியமித்து எவரையாவது உள்ளே அனுமதித்தால் மரணதண்டனை எனக் கூறுக" என்றான். இராமபிரான் இலட்சுமணனைக் காவலாக நிறுத்தினார். இருவரும் பேசி முடித்து வெளியில் வரும் சில நிமிடங்களுக்கு முன் துர்வாசர் வந்தார். இலட்சுமணன் அவரைக் கொஞ்ச நேரம் கழித்து உள்ளே செல்லலாமெனக் கூற, சீறிய துர்வாசர் "அயோத்தியிலுள்ள இராமபிரான் முதல் அனைவரையும் சபிப்பேன்" என்றார். "இவரை உள்ளே விட்டால் எனக்கு மட்டும் மரண தண்டனை. விடாவிட்டால் அயோத்தியிலுள்ள அனைவரும் அழிவர். உலகம் அழிவது காட்டிலும் நான் அழிவது குற்றமில்லை என எண்ணித் துர்வாசரை உள்ளே செல்ல அனுமதித்தான் இலட்சுமணன். "உனக்கு மரண தண்டனை அளிக்கும் படியான நிர்ப்பந்த நிலை ஏற்பட்டு விட்டது" என இராமபிரான் கூற, இராமபிரானை வணங்கிய இலட்சுமணன் சரயு நதியில் மூழ்கத் தேவேந்திரன், "இந்திரனான என்னை வென்ற இந்திரசித் எனப் பெயர் பெற்றவனை அழித்த இலட்சமணனை என் உலகத்திற்கு அழைத்துச் செல்லுகிறேன்" எனத் தன் விமானத்தில் இலட்சுமணனை ஏற்றிக் கொண்டு சென்றான்" என்கிறது தமிழ் உத்தரகாண்டம்.

தன்னை அமர்தொலைத்ததார் அரக்கன் தன் மகனைப் பின்னை அமர் வென்ற பெரியோனை: பேசரிய மன்னிய மெய்யாக்கையுடனே மகிழ்ந்து ஏத்தி பொன்னின் விமான மிசை கொண்டு போயினான். உத்தரகாண்டம்–சந்திர கேது படலம். 96–வது பாடல்.

இராமபிரானுடன் பிறந்து, இராமபிரானைப் பிரியாது சேவை செய்து இராமபிரானுக்கும், மற்றவருக்கும் நன்மை செய்வதற்காகத் தன் உடலை உதறினான் இலட்சுமணன்.

கண்ணன் ரோகிணி நட்சத்திரத்தில் அவதரித்தான். தேவகி வயிற்றில் பிறந்தான். இராமாவதாரத்தில் தான் கௌசல்யா தேவியின் திருவயிற்றில் அவதரிக்க மாற்றாந் தாயான சுமித்திரையின் திருவயிற்றில் இலட்சுமணன் அவதரித்தான். கண்ணன் அவதாரத்தில் வசுதேவரின் மற்றொரு மனைவியான ரோகிணி என்ற அம்மையின் திருவயிற்றில் ஆதிசேடனின் அம்சமான பலராமர் பிறந்தார். இராமாவதாரத்தில் தம்பியான இலட்சுமணன் அண்ணனுக்கு நிறையச் சேவை செய்தார்.

கிருட்டின அவதாரத்தில் எல்லா விதமான செயல்களையும் கணணனே செய்து அண்ணனான பலராமருக்கு எந்த விதமான வேலையையும் விட்டு வைக்கவில்லை.

பலராமன் பாரதப் போர் நடந்த போது தனது உறவினர்களுக்குள் நடந்த போரைக்காண விரும்பாமல் தீர்த்த யாத்திரை சென்றார். யாதவர்கள் ஒரு சாபத்தால் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு அழிந்த காலத்தில், ஒரு மரத்தடியில் தியானத்தில் இருந்தார். அங்குக் கண்ணன் அவருக்குத் தரிசனம் அளிக்கப் பாம்பின் உருவம் கொண்டு கடலை அடைந்தார் என்பர்.

தொகுப்பு
மருத்துவர் சிவப்பிரகாசம்

# மலரும் மருந்தும்

## மல்லிகை மலர்

மல்லிகை மலரில் தைலம் எடுக்கப்பட்டு அதை வாசனைப் பொருட்களில் சேர்த்துப் பயன்படுத்துவது வழக்கமாக உள்ளது. தாய்ப்பால் கொடுக்கும் பெண்களின் மார்பில் பால் கட்டிவிட்டால் மல்லிகை மலர்களை மார்பில் வைத்துக் கட்டினால் கட்டிய பால் கரைந்துவிடும்.

## ரோசா மலர்

ரோசா இதழ்களைச் சாப்பிட்டால் வாய்ப் புண் குணமாகும். கர்ப்பிணி பெண்களுக்குச் சிறுநீர் எளிதாக வெளியேறும். ரோசாவின் மணம் சளியைக் போக்கும். வயிற்றைச் சுத்தமாக்கும்.

## தாமரை மலர்

தாமரை மலரைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நரை, திரை, மூப்பு ஆகிய மூன்றும் ஏற்படா. காய்ச்சலுக்குத் தாமரை மலர் கசாயத்தைக் கொடுக்கலாம். நஞ்சு முறிவதற்குத் தாமரை மலரின் உள்ளே உள்ள அண்டாசயப் பகுதியை மருந்தாகக் கொடுக்கலாம். சரியாக நினைவுச் சக்தி இல்லாத குழந்தைகளுக்குத் தாமரை இதழ்களை அப்படியே பச்சையாகக் கொடுக்கலாம்.

## சூரியகாந்தி மலர்

சூரியகாந்தி மலர் மற்ற மலர்களை விட வித்தியாசமானது. சூரியகாந்தி மலர் இதழ்களைப் பறித்து அப்படியே சாப்பிட்டு வரலாம். சூரியகாந்தி எண்ணெய் மிகவும் நல்லது. இதய நோய் உள்ளவர்கள் இதைப் பயன்படுத்தலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கம்பன் ஓர் இயற்கை ஓவியன்

கவிஞர் தே. சனார்த்தனன்

தமிழ் வணக்கம்।

அன்னை அருந்தமிழே! ஆட்சியில் நீயமர
இன்னும் தயக்கமேன் என்னுயிரே? – கன்னல்
மொழிதந்த கம்பனே முன்வருவாய்। நம்தாய்
பழியைத் துடைக்கப் பரிந்து.

கம்பன் கழகம்!

என்னையும் ஓர்கவியாய் ஏற்ற பெரியீரே
நன்னயத் தோடு நவில்கின்றேன் என்னன்றி।
கன்னல் தமிழாலே கற்கண்டுப் பாத்தொடுத்த
மன்னன், புகழ்க்கம்பன் மாண்புதனை வாழ்த்துவனே।

தலைவர் வணக்கம்।

வெல்லுகவி யாகஇங்கு வீற்றிருக்கும் முத்துலிங்கம்
சொல்லுமொழி யத்தனையும் தூயதமிழ்த் தேனாகும்।
செல்லுமிடம் யாங்கணுமே செந்தமிழைச் சீராட்டும்
வல்லவர்தம் நற்றலைமை வாய்த்ததெனப் போற்றுவனே।

அவை வணக்கம்

பரவுந் தமிழைப் பாங்குடனே
        படித்துப் படித்துச் சுவைத்ததனால்
திருவுங் கலையுந் திகழ்கம்பன்
        தீட்டி வைத்த ஓவியத்தை
மரபுக் கவியால் பாடவந்தேன்
        மகிழ்வாய் என்றன் கவிகேட்கத்
திரளாய் வந்த சான்றோரே
        செய்தேன் வணக்கம் ஏற்பீரே।

தேடறிய சான்றோர்சொல், தெளிவில் லாரின்
        செவிபுகுந்து, நெஞ்சகன்று செல்லுதல்போல்
தாடகையைத் தைத்தகணை உடல்புகுந்து
        தங்குதடை இல்லாமல் எவருங் காண
ஊடுருவி வெளிச்சென்ற காட்சி தன்னை
        ஒப்பரிய ஓவியமாய்ப் படம்பிடித்து,
நாடறிய எல்லோர்க்கும் காட்டு கின்ற
        நன்மகனாம் கம்பன்சீர் பாடு வோமே।

கருநிறத்தைக் கொண்டிருக்கும் குவளைப் பூக்கள்
        கட்டழகு மங்கையரின் கண்கள் ஒக்கும்।
கரும்பனைய மடவாரின் கைக ளோடு
        கண்களையும் குவளைமலர் ஒற்றிக் கொள்ளும்।
திருமகள்வாழ் மரைமலர்கள் மங்கை யோர்தம்
        சீர்முகம்போல் பூத்திருக்கும்। முகமோ செய்ய
மரைபோல மலர்ந்திருக்கும்। அடடா அந்த
        இயற்கைஎழில் ஓவியத்தோ(டு) ஒன்று வோமே।

ஆண்டவனின் முழுவுருவம் அறியா தாரும்
        அவன்குணங்கள் சிலவற்றைக் கூறுமாப்போல்
நீண்டபதி மிதிலைநகர் உலவும் வள்ளல்
        நெடியபுகழ் இராமனையே, முடியக் காணார்।
மீண்டுவர இயலாத காட்சி யாக
        மேன்மைமிகும் தோள்கண்டார்। தோளே கண்டார்।
வேண்டரிய தாள்கண்டார்। தாளே கண்டார்।
        வியன்கம்பன் கற்பனையைப் போற்று வோமே।

மான்துள்ளி யோடாமல், வீழ்ந்தாற் போல
        மயில்கொஞ்சி யாடாமல், ஒடுங்கல் போலத்
தேன்மொழியாள் சீதையவள் அயோத்தி நீங்கச்
        சீரழிமூ தேவிகுடி புகுமாற் போலக்
கூன்மனத்துக் கைகேயி நிலங்கிடந்து
        கொற்றவனாம் தயரதனை மயங்கச் செய்தாள்।
வான்முட்டும் சூழ்ச்சிகளின் சின்ன மான
        வஞ்சகியாள் வடிவியற்கை காணு வோமே।

உதிக்கின்ற ஒளிக்கதிரை உயர்வாய்ப் பேசும்
        ஒப்பற்ற திறன்படைத்தோன் கம்ப நாடன்!
பதிக்கின்ற பாக்களிலே திங்கள், தென்றல்
        பரவிடவே பாடிவைத்தான்। மலையும் காடும்
குதிக்கின்ற அருவியுடன் வயலும் ஆறும்
        கொப்பளிக்கும் கடலோடும் சோலைக் காட்சி
கொதிக்கின்ற உலைபோலக் கூத்தே ஆடும்।
        கொஞ்சிதமிழ் இயற்கைதனை ஏத்து வோமே!

பொல்லாத கைகேயி வரத்தைக் கேட்டாள்।
        புகழ்மிக்க தயரதனும் மயங்கி வீழ்ந்தான்।
எல்லார்க்கும் இனியவனாய் இருந்த ராமன்
        எழில்கொஞ்சும் அயோத்திவீட் டகலுஞ் செய்தி
கல்லாத கோழிகளின் காதில் கேட்கக்
        கதறினவாம் இரவினிலே குய்யோ வென்றே।
நல்லார்தம் உறக்கம்இதை அறியா தென்ற
        நல்லியற்கை ஓவியத்தை நாடு வோமே।

இத்தரையில் இயற்கையதன் ஓவி யந்தான்,
        இனிதுவந்து கிளி,மஞ்ஞை புலம்பும் காட்சி।
கத்துகின்ற நாகணவாய்ப் பறவைக் கூட்டம்
        கவன்றழவும், வீடுலவும் பூனை யாவும்
சத்தமுட னேஅழவும், உள்ளி ருக்கும்
        கருவழவும், சான்றோரும் அழுவ ரென்றே
மெத்தபுகழ் உயர்கம்பன் அவலந் தன்னை
        விரைந்துரைத்தான்। அப்படத்தைக் காணு வோமே।



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதிரொளியாய்க் காட்சிதரும் இராமன், நல்ல
கட்டழகின் உச்சிக்கோர் காட்டாய் நின்றான்।
பதியோடு பின்செல்லும் சீதை, கொம்பின்
படர்கொடிக்கே உவமையெனத் திகழ லானாள்।
நதிசேர ஓடிவரும் அருவி போன்று
நல்லதம்பி இலக்குவனும் தொடர்ந்து சென்றான்।
பொதுவாக மூவருமே அழகென் றாலும்
புதுப்பொலிவை இராமனிடம் காணு வோமே।

அன்புடைய தயரதனும் அழைத்தான் என்ற
அருஞ்செய்தி கேட்டதனால் மனம கிழ்ந்து
பண்பொதிந்த கோசலத்தை யடைந்த போது
பாவியன்னை சூழ்ச்சிகளைப் பரதன் கண்டான்।
கண்நிறைந்த உதிரத்தால் கலங்க லுற்றான்।
காதுகளைக் கைகளினால் பொத்திக் கொண்டான்।
பண்புடையான் புருவங்கள் கோரக் கூத்தால்
பாழ்பட்டுக் குதித்தடடம் காணு வோமே।

கண்ணியமே இல்லாமல், இராமன் தன்னைக்
கண்டழிக்க வருகின்றான் என்றே எண்ணி
அண்ணனையே தொழவந்த பரதன் நோக்கம்
அறிதாத குகன்,வீணே சீற்றம் கொண்டு
கண்ணெருப்பாய் ஆனதெனப் படம்பிடித்துக்
காட்டுகின்ற கற்பனையின் ஊற்றாம் கம்பன்
பண்ணுடுத்த பாட்டினிலே பாடிப் பாடிப்
பைந்தமிழின் இன்பத்தைப் பருகு வோமே।

புவியோர்தாம் போற்றுகின்ற அணிகள் போன்றும்
புலத்திற்குப் பொருள்தந்து பொதிதல் போன்றும்
சுவைசேர்க்கும் துறைகளையே துய்த்தல் போன்றும்
துலங்குகின்ற ஐந்திணையைக் காத்தல் போன்றும்
தவமோங்கும் ஒழுக்கமதைத் தாங்கும் கோதா
வரியாறு! சான்றோர்கள் சுவைக்கும் தேன்சேர்
கவியாறாய்க் காட்டுகின்ற கம்ப நாடன்।
கவின்மிகுந்த ஓவியத்தைக் காணு வோமே।

சூர்ப்பணகை நடையழகைச் சொல்லச் சொல்லத்
தூயதமிழ்ச் சொற்கள்தாம் இல்லை! இல்லை!।
தேர்ச்சிலையில் தேவியன்னை வருதல் போன்று
சீறடிய ளாகி,யவள் மயில்போல் வந்தாள்।
தேர்ச்சிபெற்ற வஞ்சகியாள், நஞ்சைக் கக்கும்
தீப்பிழம்பாய் நடைபோட்டுத் திரிகின் றாளே।
கார்ப்புடையாள் வரும்அழகில், கவிகோ கம்பன்
கற்பனையைக் கண்டுமனம் மகிழு வோமே।

திக்கெட்டும், வளநகரும் நோக்கான், அங்குத்
திரண்டிருந்த காதலரை நோக்கான், சூவும்
மிக்கவொரு பெருஞ்சேனை நோக்கான், மாதர்
விருப்பமுடன் தனித்தனியே, அவனை நோக்கப்
பக்கஉற(வு) இல்லாத பாவி யைப்போல்
பார்நோக்கி, இராவணனும் இலங்கை மீண்டான்।
தக்கவொரு துணையின்றி இலங்கை வேந்தன்
தனித்தேகும் காட்சியினைக் காணு வோமே।

இந்திரசித்(து) இராமனொடு போர்தொ டுத்தே
இல்லாமல் அழித்திட்டான் சேனை தன்னை।
தந்திறனைத் தாமறியா இராமன் அன்று
தளர்வுற்றான், மூர்ச்சையுற்றான், இதனைக் கண்டு
நொந்துமனம் அழுதிட்டாள் சீதா தேவி।
நொசிவுடனே மயில்குயில்கள் அழவும், கங்கை
குந்தியழ, நாமடந்தை அழவும், பொல்லா
அரக்கியரும் குமுறுவதைக் காணு வோமே।

இலங்கையதன் பேரரசன் இராவ ணன்தான்
ஏவலிட, வீரர்தாம் கும்ப கன்னன்
களங்கமிலா உறக்கத்தைக் கலைக்கின் றார்கள்।
காலனுனை அழைக்கின்றான் எழுவாய் என்றே!
நலங்கெட்டுப் போனதுவாம் மாய வாழ்வு
நன்றாகத் தூதர்மடி இனிமேல் தூங்கும்।
துலங்குகின்ற யுத்தமெனும் காண்டந் தன்னில்
துள்ளிவரும் கற்பனையில் தோயு வோமே।

வசிட்டன்தான் இராமனுக்கு முடியைச் சூட்ட
வாலிமகன் அங்கதனும் வாளை யேந்த
நகைமிக்க நன்பரதன் குடைபிடிக்க
இலக்குமனன் சத்துருக்கன் கவரி வீச
வசையறியாச் சனகன்மகன் வீற்றிருக்க,
வன்சடைபோன் மரபினரும் உவக்கும் காட்சி,
இசைவாணர் செஞ்சத்துள் இனிக்கும் என்றும்!
இயற்கைஎழில் ஓவியத்தைக் காணு வோமே।

மேகத்தை, மலை,கடலை, வான வீதி
விளங்குகின்ற கதிரவனை, மதியைக் காட்டி
வேகத்தைக் களிற்றினொடு நடையில் பூட்டி
விரும்பும்தா மரை,குவளை, காயம் பூவைத்
தாகத்தைத் தீர்க்கின்ற நீராய் நிற்கும்
தன்மையனாம் இராமன்எழிற்(கு) உவமை வைத்தான்।
சோகத்தை அவைகண்ட தம்மா! அண்ணல்
சுடர்மேனிக்(கு) இணையில்லை சாற்று வோமே।

இயற்கைதனைக் கூறுகின்ற இடங்க ளெள்ளாம்
இனிதாகும் உவமைகளை அடுக்கி வைத்தான்।
செயற்கையென ஒருபாட்டும் பாடி டாமல்
செந்தேனில் செந்தமிழை ஊற வைத்தான்।
உயர்வாகும் செய்திகளை உலகோர் காண
ஒப்பரிய ஓவியமாய்த் தீட்டி வைத்தான்।
மயர்வறியாக் காப்பியத்தில் இயற்கை கொஞ்சும்।
மணியான பாக்களையே நுகரு வோமே।

கல்லாத கலையென்னும் இல்லை யென்று
கல்விக்கு முதலிடத்தைக் கம்பன் தந்தான்।
நல்லோர்கள் அரசியலில் இருப்பா ரானால்
நல்லாட்சி மலருமெனும் உண்மை சொன்னான்।
சொல்லாமல் பெண்மைக்குப் பெருமை தந்தான்।
தொண்டுநட்புத் துறவுகளின் அருமை சொன்னான்।
எல்லோரும் ஏத்துகின்ற இயற்கை பற்றி
எழுதாத இடமுண்டோ? எண்ணு வோமே।

முத்தொளிரும் ஓவியமாய் முழுமை பெற்று
முதன்மைபெறும் காவியமாய் விளங்கி நின்று
சத்துடைய கற்பனைகள் சரமாய்ப் பூத்துச்
சதிராடும் ஓவியமாம் கம்பன் நூலே।
கத்துகடல் சூழுலகில் கம்பனைப்போல்
கவிபாட வல்லார்யார்? இயற்கை கொண்ட
மொத்தஅழ கத்தனையும் படம்பிடித்து
முன்வரைந்த கம்பனைநாம் வாழ்த்து வோமே।

(10-05-2003 அன்று நடைபெற்ற புதுவைக் கம்பன் விழாக் கவியரங்கில் திரைப்படக் கவிஞர் முத்துலிங்கம் தலைமையில் பாடிய பாக்கள்)

*இந்தியாவில் மாநில முதல்வர் பதவியில் 11 பெண்கள் அமர்ந்துள்ளனர். முதன்முதலில் 1963 ஆம் ஆண்டு முதல்வரான பெண் சுசேதா கிருபளானி (உத்திரப்பிரதேசம்) தமிழ் நாட்டின் முதல் பெண் முதல்வர் சானகி இராமசந்திரன்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிள்ளைத்தமிழ்

புலவர் அரங்க. நடராசனார்

## முன்னுரை

கடவுளையும், மனிதருள் சிறந்தவரையும் குழந்தையாகக் கற்பனை செய்துகொண்டு பாடப்படுவது பிள்ளைத்தமிழ், சிற்றிலக்கிய வகைகளுள் சிறப்பிடத்தைப் பெற்றிருப்பது பிள்ளைத்தமிழ், (பன்னிரு பாட்டியல், பிரபந்த தீபிகை, முத்து வீரியம், செய்யுள் இலக்கணம் நீங்கலாக) மற்ற பாட்டியல் நூல்களில் முதலில் வைத்து எண்ணப்படுவது பிள்ளைத்தமிழே, சிற்றிலக்கிய வகைகளிலேயே, தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை செழித்து வளர்ந்து கொண்டிருப்பதும், ஏராளமான நூல்களைப் பெற்றிருப்பதும் பிள்ளைத்தமிழே.

## சங்க நூல்களில் பிள்ளைத்தமிழ்க் கூறுகள்

பிள்ளைத்தமிழ்க் கூறுகள் சங்க இலக்கியங்களிலேயே கால்கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

ஐய திங்கட் குழவியை வருகென யான் நின்னை
அம்புலி காட்டல் இனிது மற்று இன்னாதே
(கலித்தொகை. 15) எனவரும் கலித்தொகை அடிகள்.

முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி
வருகுவை யாயின் தருகுவன் பாலென
விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றி
(அகம். 54) எனவரும் அகநானூற்று அடிகள், அம்புலிப் பருவத்தையும்,

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி
(கலி. 51) எனவரும் கலித்தொகை அடிகள் சிற்றில் பருவத்தையும்,

பெறுமுது செல்வர் பொன்னுடைப் புதல்வர்
சிறுதோள் கோத்த செவ்வரிப் பறையின்
கண்ணகத் தெழுதிய குரீஇப் போலக்
கோல்கொண் டலைப்பப் படீஇயர் மாதோ
(நற். 58) எனவரும் நற்றிணை அடிகள் சிறுபறை பருவத்தையும்,

அகனகர் வியன்முற்றத்துச் சுடர்நுதல் மடநோக்கின்
நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்
கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை
பொற்கால் புதல்வர் புரவியின்று உருட்டும்
முக்கால் சிறுதேர் முன்வழி விலக்கும்
(பட். பாலை அடி 20–25) எனவரும் பட்டினப்பாலை அடிகள்,

அரியொலி கிண்கிணி ஆர்ப்போவா அடிதடப்பப்
பாலோடு அலர்ந்த முலைமறந்து முற்றத்துக்
கால்வல்தேர் கையின் இயக்கி நடைபயிற்றா
ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல வரும் என் உயிர்
(கலி. 81) எனவரும் கலித்தொகை அடிகள்,

தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நற்றேர் உருட்டிய புதல்வர்.
(பெரும்பாண். 248) எனவரும் பெரும்பாணாற்றுப்படை அடிகள்,

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅ ராயினும் கையின்
ஈர்ந்தின் புறூஉம் இளையோர் போல
(குறுந். 61) எனவரும் குறுந்தொகை அடிகள்,

தேரோடு தளர்நடைப் புதல்வனை – (ஐங்குறு–பா. 66)
எனவரும் ஐங்குறு நூற்று அடி முதலியவை சிறுதேர் பருவத்தையும் நினைவூட்டுவனவாய் அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

இவ்வாறு சங்க நூல்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்த பிள்ளைத்தமிழ்க் கூறுகளுக்குத் தொல்காப்பியத்திலேயே இலக்கணம் முகிழ்த்துவிட்டது எனலாம்.

நாலாயிரப் பனுவலில் பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகக் கற்பனை செய்துகொண்டு பாடிய 28 தலைப்புகளில் செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில் பருவங்கள் காணப்படுகின்றன.

நாச்சியார் திருமொழியில் முதல் இரண்டு திருமொழிகள் காமன் நோன்பையும், சிற்றில் சிதைத்தலையும் பாடுகின்றன.

பெரிய திருமொழியின் 5 ஆம் திருமொழியில் திருமங்கை ஆழ்வார் சப்பாணிப் பருவத்தைப் பாடியுள்ளார்.

11 ஆம் திருமுறையில் இடம்பெற்றுள்ள அதிராவடிகளின் மூத்த பிள்ளையார் மும்மணிக் கோவையில் சப்பாணி, செங்கீரை, ஊசல் முதலிய பருவங்கள் அமைந்துள்ளன.

இவை பிள்ளைத்தமிழ்ச் சிற்றிலக்கியத்திற்குப் பருவங்கள் அமைத்துக்கொள்ள வழிவகுத்தன என்றும், பருவத்திற்குரிய பாடல் எண்ணிக்கைக்கு வழி காட்டின என்றும் சொல்லலாம்

## பிள்ளைத்தமிழ் இலக்கணம்

தொல்காப்பியப் புறத்திணை இயல் 28, 29 ஆம் நூற்பாக்கள்

காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர் (தொல்.புற. 28)

குழவி மருங்கினும் கிழவ தாகும் (தொல்.புற. 29)

இவற்றில் குழவி மருங்கினும் கிழவதாகும் என்பதற்கு நச்சினார்க்கினியர், தம் உரையில், ஒரு திங்களிற் குழவியைப் பற்றிக் கடவுள் காக்க என்று கூறுதலானும், பாராட்டுமிடத்துச் செங்கீரையும், தாலும், சப்பாணியும், சிறுதேரும், சிறுபறையும் எனப் பெயரிட்டு வழங்குதலானும் என்பது, என்று கூறுகிறார். இவ்வுரை ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கு வடிவமைத்துக் கொடுத்ததாய் விளங்குவதை உணரலாம்.

பாட்டியல் நூல்களில் பழமையானதும், முதன்மையானதுமான பன்னிரு பாட்டியல், பிள்ளைத்தமிழைக் குழந்தையின் மூன்றாம் திங்கள் முதல் 21 ஆம் திங்கள் வரை உள்ள ஒற்றைப் படைத் திங்களில் கேட்குமாறு முன் சொன்ன பருவங்களை முறையே பாட வேண்டும் என்கிறது. (பா.பாட். 17, 18) சிதம்பரப் பாட்டியலும், பிரபந்த மரபியலும் இதனை ஒத்துக் கொள்கின்றன. (சித. பா. ம. 1 – பி. ம. 2)

நவநீதப் பாட்டியலும், வெண்பாப் பாட்டியலும் 3 முதல் 21 திங்களை ஏற்றுக் கொள்வதோடு 5 முதல் 7 ஆண்டளவும் பாடலாம் என்கின்றன. (ந. நீ. பா. 5, வெ. பா. 7)

இலக்கண விளக்கப் பாட்டியல் 3 முதல் 21 திங்களை ஏற்றுக் கொள்வதோடு 3, 5, 7 ஆம் ஆண்டு வரை பாடலாம் என்கிறது. (இ. வி. பா. 809, 810)

இந்திரகாளியர், ஆண்பாலுக்குத் தோற்றம் முதல் 16 ஆண்டு வரையிலும், பெண்பாலுக்குப் பூப்பு நிகழும் வரையிலும் பாடலாம் என்கிறார். (இ. கா. 29, 30)

அரசனைப் பாடும்போது, அரசன் இளையனாக இருந்தாலும், முடி சூட்டிக் கொண்டபின் அவன் மீது பிள்ளைத்தமிழ் பாடக் கூடாது என்று நவநீதப் பாட்டியலாரும், பரணரும் கூறுகின்றன. (ந. நீ. பா. 7 – பர. 3)

பன்னிரு பாட்டியல், ஆண்மகவிற்கு எவ்வெவற்றை உவமை கூறவேண்டும் என்று குறிப்பிடுமிடத்து, 12 ஆண்டில் ஆண்மகனுக்கு அடல் இளவிடையைக் கூறவேண்டும் என்று குறிப்பிடுவதால் (ப. பா. 30)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்நூல் 12 ஆம் ஆண்டு வரையில் பாடலாம் என்று ஒத்துக் கொள்வதாகக் கருதலாம்.

10 ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் பிங்கலந்தை நிகண்டு, திங்கள் 2 இல் தொடங்கி, ஒற்றைத் திங்கள், இரட்டைத் திங்கள் என்ற வேறுபாடு கருதாமல் 12 ஆண்டு வரையில் பாட வேண்டிய 14 பருவங்களைத் திங்கள் வாரியாகவும், ஆண்டு வாரியாகவும் பட்டியல் போட்டுத் தருகிறது.

இவைகளிலிருந்து குழந்தையின் முதல் திங்கள் தொடங்கி, ஆண்மகவுக்கு 16 ஆண்டளவும், பெண் மகவுக்குப் பூப்பு நிகழ்வளவும், பிள்ளைத்தமிழ் பாடலாம் என்பது பெறப்பட்டாலும், பெரும்பாலோர் கொள்கை 3 ஆம் திங்கள் முதல் 21 ஆம் திங்கள் வரை என்பது போதருகின்றது.

## பருவங்கள்

பருவங்களைப் பொருத்தமட்டில் ஆண்பாலுக்குக் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்ற முறையை எல்லாப் பாட்டியலாரும் கொள்கின்றனர்.

பன்னிரு பாட்டியல் மட்டும் சிற்றில் சிதைத்தலை முன்வைத்துச் சிறுபறையைப் பின்வைத்துக் கூறுகிறது. (ப. பா. 21)

வெண்பாப் பாட்டியல், காப்புக்கு அடுத்துத் தாலப் பருவத்தைக் கூறுகிறது. (வெ. பா. 8)

பெண்பாலுக்கு, ஆண்பாலின் முதல் ஏழு பருவங்களும் அப்படியே சொல்லப்படுகின்றன. பின் மூன்று பருவங்களை மட்டும் நீக்கி, அவற்றிற்குப் பதிலாக, கழங்கு, அம்மானை, ஊசல் எனப் பருவங்கள் கூறப்படுகின்றன.

இந்திர காளியார், கழங்கு, அம்மானை இவற்றை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகச் சிற்றில் இழைத்தல், குழமகன் என்ற பருவங்களைக் கூறுகிறார். (இ. கா. 30) அவர் கூறுவன மொத்தம் 16 பருவங்கள். காப்புக்கு முன்பாக, பிறப்பு, ஓகை என்ற இரண்டு பருவங்களையும், செங்கீரைக்கு முன்பாக, வளர்ச்சி, அச்சமுறுதல் என்ற இரண்டு பருவங்களையும் சொல்கிறார். ஆக அவர் புதியதாகக் கொண்ட பருவங்கள் பிறப்பு, ஓகை, வளர்ச்சி, அச்சமுறுதல் என்ற நான்கு பருவங்களாகும். பந்தாடுதலையும், சிறுசோறாக்கலையும் பிங்கலந்தை கூறுகிறது. பத்துப் பருவங்களில் பிள்ளைத்தமிழைப் பாட வேண்டும் என்று பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. ஆனால் ஆண்டாள் பிள்ளைத்தமிழ் (சவ்வாதுப் புலவர்) 11 பருவங்களையும், தில்லை சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ் (கிருட்டின ஐயர்) 12 பருவங்களையும், பெரியார் பிள்ளைத்தமிழ் (புலவர் மாவண்ண தேவராசன்) 13 பருவங்களையும் கொண்டுள்ளது. கூர்ந்து உணர்பருவம், வினாவுறு பருவம், கதைகேள் பருவம் என்பன பெரியார் பிள்ளைத்தமிழாசிரியர் புதியதாகப் படைத்துக் கொண்ட பருவங்கள்.

## காப்புக் பருவக் கடவுளர்கள்

காப்புப் பருவத்தில் திருமால், அரன், திசைமுகன், கரிமுகன், முருகன், ஆதித்தன், வடுகன், எழுவர் மங்கையர், இந்திரர், சாத்தன், நிதியவன், நீலீ, முப்பத்து மூவர், திருமகள், நாமகள், முதலியோர்களைக் குழந்தையைக் காக்குமாறு பாட வேண்டும். அக்கடவுளரைப் பாடும்போது, அவர்கள் செய்த மறச் செயல்களையும், கொலைச் செயல்களையும் நீக்கி, அருட்செயல்களையே பாட வேண்டும் என்பதும் இலக்கணம்.

பெரும்பாலான பிள்ளைத்தமிழ் ஆசிரியர்கள் இம் முறையைக் கடைப்பிடித்துள்ளனர். ஆனால், பெரும் புலவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை தம் சேக்கிழார் பிள்ளைத்தமிழில் நாயன்மார்களையே காப்புக் கடவுளர்களாகப் பாடியுள்ளார்.

திருப்போரூர் முருகன் பிள்ளைத்தமிழில் திருநீறு, உருத்திராக்கம், ஐந்தெழுத்து முதலியன காப்புக் கடவுளராகக் கூறப்பட்டுள்ளன. வைகுந்தன் பிள்ளைத்தமிழ், காப்புப் பருவம் என்று கூறாமல் தெய்வ வணக்கம் என்று கூறி, நம்மாழ்வார், ஆண்டாள், பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை, திருப்பாண், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கை யாழ்வார், மதுரகவி யாழ்வார், இராமானுசர், பெரிய நம்பி, மணவாளமாமுனி இவர்களைப் பாடுகிறது. கடவுளரில் சரகவதியை மட்டும் சேர்த்துக் கொள்கிறது.

(தொடரும்)

# புதுக்கவிதை

எழுதுங்கள் புதுக்கவிதை, மறுப்பார் யாரோ?
இலக்கணத்தைப் படித்துவிட்டுப் படைப்பைச் செய்க!
உழுதுபயிர் செய்பவனும் விதையைத் தேடி
உயர்நாற்று கடவுகளும் நீரும் காட்டித்
தழையிட்டுக் களையெடுத்துக் கட்டிக் காத்துத்
தருணத்தில் அறுவடையே செய்வான் அன்றோ?
பழுதில்லாப் பசும்பொன்னைப் பழுக்கக் காய்ச்சிப்
பக்குவமாய் அணிசெய்தல் வழக்கம் தானே!

இலக்கியத்தின் குணம்கண்டு பண்பைப் பற்றி,
எழுத்துமொழித் தத்துவத்தின் விளக்கம் காணும்
இலக்கணத்தை முன்னோர்கள் திரட்டி வைத்தார்!
இலைக்குணமாய் இடும்உணவின் தரத்தைப் பார்த்து,
நலங்கண்டு நயங்கண்டு சுவைகள் ஆறு
நடைபயிலப் பதங்கண்டு, பசியும் வைத்து,
கலையாத இளஞ்சூட்டில் உண்ணும் நாமே
கவிதைக்கே இலைவேண்டாம் என்றா சொல்வோம்!

வரம்பின்றி எதுவுமிலை, வையம் கூட
வட்டமிடும் ஒருகணக்கில், மூச்சுக் காற்று
நிரம்பியதாம் உடலுறுப்பும் பிறவும் கூட
நின்றியங்கும் ஓர்நிலையில், இசையும் கூத்தும்
தரும்இன்பம் தாளம்,பண் தவறா நின்று
தவழ்ந்துவரும், ஓவியமும் சீராம் கோட்டில்,
அரும்படைப்பாம் புதுக்கவிதை அமைதல் என்னில்
அதற்குரிய இலக்கணத்தை அமைத்தல் வேண்டும்!

ஒருமொழியின் உயிர்கவிதை, மக்கள் வாழ்வை
உயர்த்துவது, பண்படுத்தும் அறிவுச் சாலை,
அருவியெனச் சொல்பெருக அமிழ்தை ஊற்றும்,
அடக்கமாய்ப் பொருள்காக்கும், அழகு செய்யும்,
உருகாத மனமுருகி இன்பம் பேச
உருவாகும் மெல்லிசையாய்ச் சந்தம் கட்டி,
அருள்மொழியை வளர்ப்பதுவே கவிதை, இன்றே
அறிவிப்பீர் கவிதைஉரை நடையே என்று!

— கவிஞர் கண. கபிலனார்

## உன் உயிரும் என் உயிரும் ஒன்று!

பொழுது புலரும் நேரம், அந்தப்புரத்துக்குள் நுழைகின்றான் அரசன். வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள் அரசி. ஏன்? அவன் எங்கிருந்து வருகிறான் என்று அவளுக்குத் தெரியும். ஆம், அவனுடைய காமக் கிழத்தியரிடம் கடந்த இரவைக் கழித்து விட்டு வந்திருக்கிறான். மனைவியின் சினம் அவன் எதிர்பார்த்ததுதான். அவளை எப்படி அமைதிப்படுத்துவது? இதுபற்றி எண்ணமிட்டுக் கொண்டுதான் வந்தான்.

அருகில் சென்றான். அவள் தோள்களைப் பற்றித் தன்பக்கம் திருப்பினான். தலை கவிழ்ந்தவாறே நின்றாள் அவள் என்றாலும் கண்களை நிமிர்த்தி அவனது அகன்ற மார்பை ஒருமுறை நோட்டமிடத் தவறவில்லை. பகீரென்றது அவளுக்கு! அப்படி எதைக் கண்டுவிட்டாள் அவன் மார்பில். இங்கும் அங்குமாகச் சிறு காயங்கள் சில இருந்தன. அவை என்ன காயங்கள் என்பது அவளுக்குத் தெளிவாய்த் தெரியும். இரவு நடந்த விளையாட்டுக்களை அக்காயங்கள் அவளுக்குத் தெளிவாய் எடுத்துச் சொல்லின. இவர் அவர்களை அப்படியே அள்ளி இருப்பார், அவர்கள் இவர் மார்பில் செல்லமாகக் கிள்ளி இருப்பார்கள். கும்மாளம் அடித்திருக்கிறார்கள்! பற்றிக் கொண்டு வந்தது அரசிக்கு! முகத்தைப் பிடித்து மெல்ல உயர்த்தினான் அரசன். என் உயிரே! என்றான். சினம் பொங்கிப் பீறிட்டது அவளுக்கு, அதோடு சற்றுச் சிரிப்பு வந்தது. ஆமாம் உங்களுக்கும் எனக்கும் உயிர் ஒன்றுதான். அது இன்றைக்குத் தான் எனக்குக் கூடத் தெரிந்தது என்றாள். அப்படியா? எப்படித் தெரிந்தது? என்றான் அவன். அவள் ஊடல் தணிந்து பேசுகிறாள் என்ற மகிழ்ச்சி அவனுக்கு, வச்சத்தார் வழி வந்த மன்னரே! என் தங்கைமாரின் அழகான கை நகங்களால் உங்கள் அழகான மார்பில் ஏற்பட்டுள்ள காயத்தால் என் மார்பு எரிகிறது. அதனால்தான் சிரிப்பும் சினமும் எப்படி வெடிக்கின்றன பாருங்கள் அவள் பேச்சில்.

உன்னுயிரும் என்னுயிரும் ஒன்றென்ப(து) இன்றறிந்தேன்.
மன்னுபுகழ் வச்சத்தார் மன்னவா! – உன்னுடைய
பொன்னாகத் தெங்கையர்தம் பொற்கைநகச் சின்னங்கண்(டு)
என்னாகத்தே எரிகை யால். – வச்சத் தொள்ளாயிரம்.

–முனைவர் சுந்தர சண்முகனார்

(நன்றி –பாவலர் பண்ணை–முனைவர் இரா. திருமுருகனார்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாடகத்தில் குழு

புலவர் இரா. பொன்னரசு, க.மு

தொடர்ச்சி – 6

## செமிசு

இந்த நடனம் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களாலும், பெண்களாலும் ஆடப் படுகின்றது. இந்த நடனம் மெதுவாக ஆரம்பிக்கப்படுகின்றது. இவர்களது நடனத்தில் ஆண்களும் பெண்களும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து ஆடுகிறார்கள், பிறகு இவர்கள் மூன்று அல்லது நான்கு வட்டங்களில் ஆடுகின்றனர். காலின் நுனிப்பகுதியும், பாதப் பகுதியும் நன்றாகப் பயன்படுத்தி ஆடுகின்றனர். அவைகளை நன்றாக வலிமைப்படுத்தி வைத்திருக்கின்றனர். இளைஞர்களும், பெண்களும் ஆடும் நடனத்தில் ஒரு நாடகத்தின் தன்மையைக் காணலாம்.

இவர்கள் பாடி ஆடும் இந்த நடனத்தில் மிருகங்களின் அசைவுகள் போன்று அவை படியே செய்து ஆடுவார்கள். மற்றொரு சாதாரண நடனமாகச் சேவல் சண்டை எனப்படும் நடனமும் செமிசுல் அடங்கும். எனவே நாகாசு இனத்தின் பழங்குடி மக்கள் பற்பல நடனங்களில் சிறந்து விளங்கியும், குழுமம் ஆடிப்பாடியும் இந்து மதத்தின் பற்றும் வெளிப்படுத்துபடியாக நடனங்கள் இருந்துள்ளன என்பது தெரிய வருகின்றது.

## அச்சாம் – ஆங்கியநாட் – ஒசா பாலிசு

அச்சாம், மணிப்பூர் இந்த இடங்களில் உள்ள நடனக் குழுவினர்கள், நடனம், நடன நாடகங்கள் யாவும் அழகியல் பார்வையோடு நடத்தப்படுகின்றன. அச்சாம் மாநிலத்தின் ஆய்வாளர்கள் மூன்று விதமாக இவர்களது நடனங்களை வகைப் படுத்துகின்றனர். 1. நாடி 2. ஒசா பாலிசு, 3. ஆங்கிய நாட் என்பனவாகும். இதில் நாடி என்பது கோயில்களில் நடனம் ஆடுவதற்குப் பெயர். ஒசா பாலிசு, ஆங்கிய நாட் இவை இரண்டும் நடன நாடகங்கள்.

அச்சாமின் மிகப் பழமையான நாட்டுப்புறக் கலையான ஒசா பாலிசு வைணவத் திருநாளில் நடத்தப்படுகிறது. இஃது மகாபாரதம், இராமாயணம் மற்றும் புராண காவியங்களைக் கொண்ட கதைகளால் நடிக்கப் படுகிறது. ஒசா என்பவர் இந்த நாடகத்தின் தலைவன் ஆவான். இவன்தான் கதையை நடத்திச் செல்கிறான். ஆங்கிய நாட் எனும் நாடகத்தில் பாலிசு என்னும் நடனக்குழுத் தலைவன் உண்டு. இவன் இக் குழுத் தலைவன் ஆவான்.

வைணவர் திருநாளில் நடக்கும் இந்த நடன நாடகத்தின் சிறந்த தலைவராக இருப்பவர் சங்கர தேவா என்பவராவார். இவர் சிறந்த கலைஞர். பல்துறையில் திறமை உடையவராவார். இந்த நடன நாடகத்தைப் பாவோனா என்று அழைப்பர்.

ஆங்கிய நாட் என்னும் நடன நாடகம் சாதாரண மொழியில் இருக்கும். இது ஏறக்குறைய ஒசாவைப் போன்றே இருக்கும். இது நாட்டுப்புறக் கலை வடிவம் பெற்ற நடன நாடகமாகும். எனவே, அச்சாம் மாநிலத்தில் புகழ்பெற்ற இந்த இரு நடன நாடகங்களிலும் குழு இடம் பெற்று இருக்கிறது. குழுத் தலைவனுக்கு ஒசா என்று பெயர் வைத்திருப்பது, கிரேக்க நாடகத்தில் குழுத் தலைவன் கொரிபெசு என்பது போன்று இவனும் உள்ளன்.

## அரியான – தாம்யால் – லகூர்

பஞ்சாப், அரியான இந்த இரண்டு மாநிலங்களும் விவசாயம் செய்து சமூக வாழ்க்கையை வாழ்கின்றனர். இவர்களுடைய நடனத்திற்கான கரு மகாபாரதப் போர்க்குரிய படலங்களை மையமாகக் கொண்டது. தாம்யால் பாடல்கள் யாவும் காதலைப் பற்றி உள்ளன. சிலர் தாம்யால் என்பதனைத் தாமலா என்றும் அழைப்பர். இந்த நடனங்களை ஆண் அல்லது ஆணும் பெண்ணும் கலந்து ஆடலாம். நடனமானது மெதுவாக ஆடக் கூடியது. அதற்குத் தகுந்தாற்போல் இசையும் அமைந்திருக்கும். தாளத்திற்கு ஏற்ப கால் அசைவுகள் இடம் பெற்றிருக்கும். எல்லோரும் பாடிக் கொண்டே ஆடலாம்.

நடனக் குழுவினர் முதலில் அரை வட்டமாக ஆடுவர். பின்பு இரண்டு வரிசையாக நின்று ஒரு வரிசை பாடுவதும். பின்பு அதை அவர்கள் பாடுவதாக அமையும். நடனத்தின் ஓசை அதிகரித்ததும் பெரிய அளவில் வட்டமாக ஆடுவர். இந் நடனத்தில் அதிகமான இசைக் கருவிகள் இசைக்கப்படுகின்றன.

லகூர் நடனத்தில் பெண்கள் மட்டுமே கலந்து கொள்வர். பெண்கள் நீண்ட பாவாடை அணிந்திருப்பர். இந் நடனம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கும், பாடல் மெதுவாக இருந்து கேள்வி கேட்பதாகவும், பதில் கூறுவதாகவும் அமைந்திருக்கும். பெண்கள் அரை வட்ட வடிவில் ஆடி வருவர்.

## உத்திரபிரதேசம் – இராசலீலா

இராசலீலா என்பது கிருட்டினனைப் பற்றியது, இது தசரா திருநாளில் கொண்டாடப் படுகிறது. இராமலீலா என்பது இராமனைப் பற்றியது, இராசலீலா, இராமலீலா இரண்டும் சிறந்த நாடகங்களாகும். இது இந்திய கலாச்சாரத்தின்படி அமைந்து சிறப்புற்று விளங்கிற்று.

## மத்தியபிரதேசம் – காக்சர் – மரியாசு

மத்தியபிரதேசம் 43 மாவட்டங்களைக் கொண்டது. மிகப் பெரிய அளவில் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இந்தக் காக்சர் நடனத்தில் இளம் பெண்களும், இளைஞர்களும் பங்கு பெறுவர். இந் நாடகத்தின் தாளம் காதல் வயப்பட்டதாக இருக்கும். டிம்சி, பன்சுரி, மன்டர் போன்ற இசைக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள்.

## மரியாசு

இந் நடனத்தைக் கோண்டு நடனம் என்றும் அழைப்பர். இவர்கள் வணங்கும் சிவனின் உருவம் தலையில் விலங்கின் உருவம் இருக்கும். சிவன் விலங்குகளின் கடவுள் என்பதைக் காட்ட இதுவுள்ளது. இந்தியாவின் நடனங்கள் கதக்களி, யக்சகானம் போன்றவற்றிலும், நரசிம்மம் அவதாரம் போன்றவற்றிலும் முகமூடி அணிந்திருக்கிறார்கள்.

## சௌராச்டிரா – கசீ

இந்த நடனம் சௌராச்டிராவின் சாத்ரா மாவட்டத்தில் தென்பகுதியில் உள்ள மக்களிடம் காணலாம். கையில் உள்ள அவர்களது கைக்குட்டையைக் கொண்டு தாள ஓசைக்கு நடனம் ஆடுவர். இந்த நடனம் சிவனை வழிபடுவதோடு, சக்தி, விநாயகர், கிருட்டினர், இராதா ஆகியோரையும் வழிப்படுகிறது.

## ஆந்திரபிரதேசம் – சென்சூச்

இம் மாநிலத்தில் சென்சூச் என்னும் பழங்குடி மக்கள் மைசூர், ஒரிசா, தமிழ்நாடு ஆகிய இடங்களில் பரவி வாழ்கின்றனர். இந்த நடனத்தின் ஒவ்வொரு அசைவும், ஒவ்வொரு இயக்கமும் எவ்வாறு இருக்க வேண்டுமென இந்த நாடகத்தில் உள்ளது.

## கேரளா – கோல்காளி

கேரளாவின் பழம்பெரும் கலையாக விளங்குவது கதக்களி, கூடியாட்டம் போன்றவை யாகும். மோபலா பாடல்கள் கேரளாவில் பிரசித்திப் பெற்றது. இந்த நடனத்தில் ஒவ்வொருவரும் பையில் ஒரு குச்சி வைத்திருப்பார்கள். இதற்குத் தப்பசு என்று பெயர். இடது கையில் தப்புசு, வலது கையில் இசைக் கருவியும் இருக்கும். இந் நடனத்தில் கை, தலை, உடல், அசைவுகள் பெற்று விளங்கும். இந்த நடனத்தில் குழுவின் தலைவன் முதலில் பாடுவான். பிறகு குழுவினர்கள் பாடுவார்கள். இந்தப் பாட்டிற்கு ஏற்ப தாள அசைவுகள் கால் பாதங்கள் அசைகின்றன. காலின் முன் பகுதியும் மெதுவாக வைத்து ஆடுவார்கள். கேரளாவில் பழங்குடி மக்களான கலனாடிசு, பானியன்சு, இருலசு, கடாரசு, மலையான் போன்றவர் திறமையான நாட்டுப்புறக் கலைஞர்கள் ஆவார்.

இதுவரையில் மரபுவழிக் கலைகளில் குழுமம் பயன்படுத்தப் பட்டமையை அறிகிறோம். குழுமம் மரபு வழிக் கலைகளில் எத்தகைய துணையைப் பெற்றுள்ளது என்பது நன்கு புலனாகிறது.

## ஆய்வு முடிவுகள்.

1. மரபுவழிக் கலைகள் மண்ணின் மனத்திற்கு ஏற்ப தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றுவதால் குழு அதன்கண் இடம் பெறுவது அறியப்படுகிறது.

2. இந்தியர் சமயத்தில் ஈடுபாடுடையவர். அதன் காரணமாக மரபுவழிக் கலைகள் யாவும் சமயத்தோடு சார்ந்தே உள்ளன.

3. இந்தியர்கள் பல கலைகளில் சிறந்து விளங்கினர் என்பதனை அவர்கள்தம் மரபுவழிக் கலைகளிலிருந்து அறியலாம்.

4. இந்தியாவில் உள்ள மாநிலங்கள் பலவற்றில் மரபுவழிக் கலைகளில் குழு எத்தகைய சிறப்பு பெற்றிருந்தது எனப் பெறப்பட்டது.

5. ஆங்கிய நாட் நடன நாடகத்தில் பாலிசு என்னும் நடனத்தில் ஒசா என்னும் குழுத்தலைவன் இடம் பெற்றதை அறியலாகிறது.

6. இராம்லீலா, இராசலீலா போன்றவற்றைக் காணும் போது இராம்லீலாவில் முகமூடிகள் பயன்படுத்தி யுள்ளனர். உறனுமான், நரசிம்மமூர்த்தி போன்ற முகங்களுக்கு முகமூடி அமைத்தனர்

7. ஒவ்வொரு மாநிலத்திலும் இடம் பெற்ற மரபுக் கலைகளில் அந்தந்த மாநிலங்களின் தன்மைகளையும் பழங்குடி மக்களின் நிலைகளையும் அறிய முடிந்தன.

8. பழங்குடி மக்களின் மரபுவழிக் கலைகளில் அவர்கள் அணிந்திருந்த உடைகளை அறிய முடிந்தது.

9. பழங்குடி மக்களின் மரபுவழிக் கலைகள் யாவும் மகாபாரதம், இராமாயணம், புராணம் போன்றவைகளின் அடிப்படையாகக் கொண்டு விளங்குவது அறிய முடிந்தது. (தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதுவைக் கம்பன் விழா

புதுவைக் கம்பன் கழகம் 38 ஆம் ஆண்டுக் கம்பன் விழாவை மே 09, 10, 11, ஆகிய நாட்களில் சிறப்பாகக் கொண்டாடியது. சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி மு. கற்பக விநாயகம் தலைமை ஏற்க, கம்ப வள்ளல் ஆர். சக்கரபாணி செட்டியார் முன்னிலை ஏற்க, திருமதி சந்திரிகா இராசாராம் இறை வணக்கம் பாட, புதுவை மாநில முதல்வர் ந. அரங்கசாமி வரவேற்புரை அளிக்க, புதுவை மாநில துணை நிலை ஆளுநர் கே. ஆர். மல்கானி தொடக்கவுரை யாற்ற, விழா மலரை புதுவை மாநிலச் சட்டப் பேரவைத் தலைவர் ம.தெ.ரா. இராமச்சந்திரன் வெளியிட விழா இனிதே தொடங்கியது.

## சென்னை வானதி பதிப்பக நூல்கள் வெளியீடு.

சமூக நலத்துறை அமைச்சர் மு. சந்திரகாசு அவர்களின் தலைமையில் கீழ்க் காணும் நூல்கள் வெளியிடபட்டன. திரு ந.செல்ல கிருட்டினன் எழுதிய வான்மீக இராமன் கம்ப இராமன் ஓர் ஒப்பீடு என்ற நூலைக் கலைமாமணி நாகி அறிமுகம் செய்ய, திரு தி. செல்வராசு பெற்றுக்கொண்டார். வித்வான் கோ. தனபால் இயற்றிய கம்பன் கண்ட அநுமன் நூலை பாவலர் சீனு. இராமசந்திரன் அறிமுகம் செய்ய ,திரு வேல். சொக்கநாதன் பெற்றுக்கொண்டார். கம்ப இராமாயணத்தில் இயற்கை வனப்புகள் என்ற நூலைப் சொல்லாய்வுச் செல்வர் சு. வேல்முருகன் அறிமுகம் செய்ய திரு மு. கந்தசாமி பெற்றுக்கொண்டார்.

## கம்பன் விழாப் பரிசுகள்

கம்ப காவலர் வழக்கறிஞர் முருகேசன் பானுமதி அறக்கட்டளைப் பரிசைத் திரு ஆ. ஏழுமலை வழங்க, திரு சீ. பிரசாந்தன் பெற்றுக் கொண்டார். அமரர் ஆதிமூலம் ஆசிரியர் அறக் கட்டளைப் பரிசுகளை விவசாயத்துறை அமைச்சர் ஆ. நமசிவாயம் வழங்க, செல்வி சிந்துசான்லூா் பெற்றுக்கொண்டார். கேட்டலும் கிளத்தலும் நிகழ்சியில் சிறந்த வினா எழுப்பிய சுவைஞருக்கான பரிசைப் பேராசிரியர் திருமதி இரா. மணிமேகலை பெற்றுக்கொண்டார். கம்பவாணர் புலவர் அ. அருணகிரி அறக்கட்டளைப் பரிசைச் சட்டப் பேரவைத் துணைத்தலைவர் ஏ.வி. சுப்பிரமணியன் வழங்க, திரு முனைவர் தெ. ஞானசுந்தரம் பெற்றுக் கொண்டார். மேலும் கம்ப வள்ளல் ஆர் சக்கரபாணி செட்டியார் அறக்கட்டளைப் பரிசு, சே.வி. எச் நிறுவன அறக்கட்டளைப் பரிசு, புதுவை அரசுக் கலைப் பண்பாட்டுத் துறை வழங்கும் கம்பன் இலக்கியப் பரிசு, அமரர் பி.சி புருடோத்தம ரெட்டியார் நினைவுப் பரிசு, அமரர் அ.சி. கந்தசாமி நினைவுப் பரிசு, அமரர் நீதிபதி எச். மகராசன் நினைவுப் பரிசு, அமரர் வின்புரோச் சின்னி கிருட்டினன் நினைவுப் பரிசு, டாப் எசன்சு நினைவுப் பரிசு, திரு வேல். சொக்கநாதன் அறக்கட்டளைப் பரிசு, அமரர் ந. இராசுப்பிள்ளை நினைவுப் பரிசு, மனப்பாடப் போட்டிப் பரிசு, அமரர் செல்வி கர்மேலா லெபோ நினைவுப் பரிசு, கோவை மில் பரிசு, திருமதி சூரியவிசயகுமாரி துரை மாலிறையன் அறக்கட்டளைப் பரிசு, திருமதி புவனாகுமாரி அறக்கட்டளைப் பரிசு, அமரர் செல்வசுந்தர் குமாரசாமி நினைவுப் பரிசு விழாவில் வழங்கப்பட்டன.

## பாவலர்மணி சித்தன் அவர்களுக்குப் பாராட்டு

திரைப்படக் கவிஞர் வாலி அவர்களின் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் ஆ. அன்பழகன் வாழ்த்துரை வழங்க, கலைமாமணி விருது பெற்ற கம்பன் கழக உறுப்பினர், புதுவை நாவலர் மன்றச் செயலாளர், பாவேந்தர் பாரதிதாசனாரின் மாணவர், பெரும் புலவர், வித்வான் பாவலர்மணி சித்தன் அவர்களுக்குப் பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

## தனியுரை

திரு கலிய. எத்திராசலு தலைமை ஏற்க, திருமதி இராசேச்வரி திருநாவுக்கரசு முன்னிலை ஏற்க, தமிழ்ப் பண்பாட்டின் விளக்கம் கம்பன் என்ற தலைப்பில் திரு ஔவை நடராசனார் தனியுரை அளித்தார்.

## எழிலுரை

திரு அரி. பாச்கரன் தலைமை ஏற்க, திரு சிவ விசயன் சிவராமன் முன்னிலை ஏற்க, வான்மீகியில் கம்பன் செய்த மாற்றங்கள் என்ற தலைப்பில் செல்வி இரா. உருக்மணி எழிலுரை அளித்தார்.

## கேட்டலும் கிளத்தலும்

திரு சோ. சத்தியசீலன், திரு அ. அறிவொளி, திரு தமிழருவி மணியன், திரு தெ. ஞானசுந்தரம், திரு இ. செயராசு ஆகியோர் கேட்டலும் கிளத்தலும் நிகழ்வில் பங்கேற்று உரை வழங்கினர்.

## சுவை நுகர் மேடை

திரு கோ. சாரங்கபாணி தலைமை ஏற்க, திரு வி. பாலாசி முன்னிலை ஏற்க, உலக வழக்கில் கம்பன் குறிப்பிடாத இராமாயணச் செய்திகள் என்ற தலைப்பில் திரு இரா. இராமசாமி அவர்களும், சங்க இலக்கியத்தில் கம்பன் குறிப்பிடாத இராமாயணச் செய்திகள் என்ற தலைப்பில் திரு பழ. பழநியப்பன் அவர்களும், ஆழ்வார் பாக்களில் கம்பன் குறிப்பிடாத இராமாயணச் செய்திகள் என்ற தலைப்பில் திரு தெ. ஞானசுந்தரம் அவர்களும் நல்லுரை நல்கினர்.

## வழக்காடு மன்றம்

வழக்காடு மன்றத்திற்குத் திரு இளம்பிறை மணிமாறன் நடுவராகப் பொறுப்பேற்றார். சரசுவதி சுப்பையா முன்னிலை வகித்தார். இராமன் உணர்ச்சி வயப்படுபவனே என்ற வழக்கை திரு பர்வீன் சுல்தானா தொடுத்தார். அதை பாரதி பாச்கர் மறுத்தார்.

## பாட்டரங்கம்

திரைப்படக் கவிஞர் முத்துலிங்கம் தலைமையில் பாட்டரங்கம் சிறப்பாக நடைபெற்றது. அரங்கிற்கு அ.மு. கிருட்டினமூர்த்தி முன்னிலை ஏற்றார். கம்பன் ஓர் அறப்பொருள் அறிஞர் என்ற தலைப்பில் பாவலர் மணி சித்தன் அவர்களும், கம்பன் ஓர் அரசியல் அறிஞர் என்ற தலைப்பில் பாவலர் சொ. சொ. சுந்தரம் அவர்களும், கம்பன் ஓர் இயற்கை ஓவியன் என்ற தலைப்பில் கவிஞர் தே. சனார்த்தனன் அவர்களும், கம்பன் ஒரு சந்தப் பாவலன் என்ற தலைப்பில் பாவலர் ஆண்டாள் பிரியதர்சினி அவர்களும் கவிதை படைத்தனர்.

## பட்டி மன்றம்

தியாகத்தில் மிகச் சிறந்தவன் – இலக்குவனே, பரதனே, சடாயுவே என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது. திரு சுகிசிவம் அவர்கள் நடுவராகத் திகழ்ந்தார். திரு பரசுராமன் முன்னிலை ஏற்றார். இலக்குவன் அணியில் சொ. சொ.மீ. சுந்தரம், தி. கோவிந்தராசு, மா. இராமலிங்கம், பரதன் அணியில் த. இராமலிங்கம், நளினி சாரங்கம், எச். விசயகிருட்டினன், சடாயுவு அணியல் கே.சுமதி, சிவ கைலாசநாதன், நா. இளங்கோ ஆகியோர் சொற்போர் நிகழ்த்தினர்

## தனியுரை

திரு வேல். சொக்கநாதன் தலைமையில் கம்பன் படைத்த கவின்மிகு சிறு பாத்திரங்கள் என்ற தலைப்பில் திரு இளம்பிறை மணிமாறன் தனியுரை அளித்தார்.

## மேல் முறையீடு

திரு சாலமன் பாப்பையா, திரு கணசித்சபேசன், திரு அன்பரசு ஆகிய மூவரும் நடுவர்களாகப் பொறுப்பேற்க முதல் நாள் நடந்த பட்டி மன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்பட்டது. நோக்கர்கள் சார்பில் திரு சுதா சேசையன் அவர்களும், இலக்குவன் சார்பில் திரு தி. இராச கோபாலன் அவர்களும், பரதன் சார்பில் திரு வீ. அசோக்குமாரன் அவர்களும், சடாயுவு சார்பில் இ. செயராசு அவர்களும் உரை அளித்தனர். மூன்றாம் நாள் மாலை கலைமாமணி சி. தண்டபாணி அவர்கள் கம்பன் இசை அமுதை வழங்கினார்

## சிந்தனை உரை

திரு சி. பிரசாந்தன் தலைமையில், அரே இராமா! அரே கிருட்டினா என்ற தலைப்பில் திரு இரத்தின சனார்த்தனன் சிந்தனை உரை வழங்கினார்.

இவர்கள் சந்தித்தால் என்ற நிகழ்வுக்கு திரு க. முத்து கருப்பன் முன்னிலை ஏற்றார். கம்பராக திரு இரா. உருக்மணியும், வள்ளுவராகத் திரு இ. செயராசும் சந்தித்துக் கொண்டார்கள். சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி கே. கோவிந்தராசன் அவர்கள் தலைமையில் ஆடல் வேள்வி நடைபெற்றது. கலைமாமணி, யோகமணி, யோகாச்சாரினி திருமதி மீனாட்சிதேவி பவனானி இயக்கத்தில் புதுவை யோகாஞ்சலி நாட்டியாலயம் இராமாவதாரம் என்ற நாட்டிய நாடகத்தை நடத்தியது. நன்றி நவிலல் நிகழ்வோடு விழா இனிதே நிறைவுற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாய் மண்ணே வணக்கம்

☐ இராணிமேரி மகளிர் கல்லூரி வளாகத்தை இடித்து விட்டு அங்கே தமிழக அரசின் புதிய தலைமைச் செயலகத்தை அமைக்கச் செயலலிதா அரசு முடிவெடுத்ததைக் கண்டித்து நடந்த போராட்டத்தில் மு.க. சாலின் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர். பின் விடுதலை செய்யப்பட்டனர். இப்போது இந்தக் கல்லூரியை இடிக்க உச்ச நீதி மன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

☐ தனியார் கல்லூரிகள் புற்றீசல்போல் தமிழகத்தில் தோன்றி வருவதால் மாணவர்களுக்குத் தரமான கல்வி கிடைக்கவில்லை. இதனால் கல்லூரிகளின் தரம் தாழ்ந்து வருவதாக அண்ணாமலை பல்கலைக் கழகத் துணைவேந்தர் பாலகுருசாமி அவர்கள் இதழாளர்களுக்குத் தெரிவித்தார்.

☐ ஏப்ரல் மாதம் வெளியான படங்களில் 1.சாமி, 2.புதியகீதை, 3.தம், 4.அரசு, 5.காதல் சடுகுடு, 6.சேனா ஆகியவைகளின் வெற்றி கொடுக்கப்பட்டுள்ள வரிசைப்படியே உள்ளது. தம் படத்திற்குப் பின் நடிகர் சிம்பு சம்பளமாக இரண்டு கோடி கேட்கிறார்.

☐ அண்மையில் கூடிய ம.தி.மு.க பொதுக்குழுவில் அனைத்து உறுப்பினர்களும், மத்திய இணை அமைச்சர்கள் செ. இராமசந்திரனும், ம. கண்ணப்பனும் கலந்து கொண்டனர். பொடா சட்டத்தில் கடந்த ஒன்பது மாதங்களாகச் சிறையில் இருக்கும் தலைவர் வை.கோ.வை விடுதலை செய்ய கோரி மத்திய அரசுக்குக் கோரிக்கை வைத்துள்ளனர். வேலூர்ச் சிறையில் வை.கோ.வை கலைஞரின் மகன் மு.க. சாலின் சந்தித்து இரண்டு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

☐ 22-05-2003 காலை 8-27 மணிக்கு ரிசப இராசியில் இருந்து மிதுன இராசிக்குச் சனி பகவான் செல்வதாகச் சோதிடம் சொல்கிறது. இதை முன்னிட்டுத் திருநள்ளாறு திரு தர்ப்பாரண்யேச்வரர் கோயிலில் உள்ள சனிச்வரனை வணங்க இலட்சக் கணக்கான பக்தர்கள் வந்திருந்தனர்.

☐ சென்னையில் புதியதாகத் திறக்கப்பட்ட வான ஊர்தி நிலைய விழாவிற்குப் பிரதமர் வாச்பாய் வருகை தந்தார். மத்திய மந்திரி டி.ஆர். பாலுவிற்கு(தி.மு.க) பிரதமருக்கு அருகில் அமரும் இடமும், தனக்கு ஓரமாக அமரும் இடமும் ஒதுக்கியதால் அந்த விழாவிற்குச் செல்லாமல் புறக்கணித்தார் முதல்வர் செயலலிதா.

☐ மே இறுதி வரை 634 நபர்களைக் கொன்ற சார்சு என்னும் நுரையீரல் ஆட்கொல்லி நோய் சீனா, சிங்கப்பூர், ஆங்காங், கனடா, போன்ற நாடுகளில் 7875 நபர்களைத் தாக்கியுள்ளது. கோவாவில் ஒருவருக்குச் சார்சுநோய் வந்துள்ளது. சிங்கப்பூரிலிருந்து தனது சொந்த ஊரான வேலூருக்கு வந்த ஒருவருக்கு இந் நோய் வந்துள்ளது.

☐ தந்தையின் பெயரைத் தலைப்பெழுத்தாகப் போடுவதைப் போல், தாயின் முதல் எழுத்தையும் கூடச் சேர்த்துப் பிள்ளைகள் தங்கள் பெயருக்கு முன்னால் போட்டுக் கொள்ளலாம் என முதல்வர் செயலலிதா அறிவித்தார், அதாவது சூரியா என்ற குழந்தைக்குத் தந்தை செயகுமார், தாய் வத்சலா என இருந்தால் இனிமேல் செ.வ. சூரியா என எழுதலாம்.

☐ எண்ணெய் விலை ஏற்றத்தைக் கண்டித்து இந்தியா முழுவதும் சரக்குந்து (லாரி) உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்திலும் புதுவையிலும் இந்தப் போராட்டம் நடந்ததால் காய்கறி மற்றும் சமையல் பொருட்களின் விலை இருமடங்காக உயர்ந்திருப்பது பொது மக்களைப் பாதித்துள்ளது.

☐ தனியார் மருத்துவக் கல்லூரிகள் திறக்க அரசு அனுமதி தரக் கூடாதெனத் தமிழகத்தில் மருத்துவர்களும், மருத்துவக் கல்லூரி மாணவர்களும் போராட்டத்தில் குதித்துள்ளார்கள். போராட்டத்தை கைவிடா விட்டால் அவர்கள் மீது அரசின் எச்மா சட்டம் கடுமையாகப் பாயும் என முதல்வர் செயலலிதா அறிவித்துள்ளார்.

தொகுப்பு – கவிஞர் பாரீசு பார்த்தசாரதி

DESTINATAIRE



KAMBAN KAJAGAM
6, RUE PAUL LANGEVIN,
95140 - GARGES LES GONESSE
FRANCE

## தமிழா திருந்தாயோ!

உன்றன் பகையை அறியாமல்
உண்டு கிடக்கும் தமிழா!கேள்!
இன்றுன் நிலையை எண்ணாமல்
இழிவை நாடிச் செல்கின்றாய்!
என்றுன் பழியை உணர்வாயோ?
இன்பத் தமிழைக் காப்பாயோ?
அன்றுன் வாழ்க்கை உயர்ந்திடுமே!
அருமைத் தமிழா திருந்தாயோ!

– ஆசிரியர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்